# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report 2019



ශ්‍රී ලංකා මිනින්දෝරු දෙපාර්තමේන්තුව
இலங்கை நில அளவைத் திணைக்களம்
Sri Lanka Survey Department

# 2019 ஆம் ஆண்டுக்கான
# நில அளவையாளர் நாயகத்தின்
# செயலாற்றுகை அறிக்கை
## இலங்கை நில அளவைத் திணைக்களம்

**செலவுத் தலைப்பு இல - 288**

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1.0 | நிறுவன அறிமுகம் | 28 |
| 1.1 | அறிமுகம் | 28 |
| 1.2 | நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் | 30 |
| 1.3 | அடிப்படைச் செயற்பாடுகள் | 31 |
| 1.4 | ஒழுங்கமைப்புக் குறிப்புக்கள் | 33 |
| 1.5 | திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள் | 34 |
| 2.0 | முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு | 35 |
| 3.0 | ஆண்டுக்கான ஒட்டு மொத்த நிதிச் செயற்றிறன் | 36 |
| 4.0 | செயலாற்றுகைச் சுட்டிகள் | 43 |
| 5.0 | பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை | 45 |
| 6.0 | மனித வள விபரம் | 45 |
| 7.0 | இணக்கப்பாட்டு அறிக்கை | 49 |
| 8.0 | முடிவுரை | 57 |
| 9.0 | இணைப்புங்கள் | |
| i | நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | (பக்கங்கள் i- xxviii) |
| ii | கள அலுவலகங்களால் செய்யப்படும் செயல்பாடுகள் | (பக்கங்கள் i- xii) |
| iii | தியத்தலாவ அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் | (பக்கங்கள் i- viii) |
| iv | **கணக்கு தணிக்கை அறிக்கை** (தயவுசெய்து சிங்களப் பதிப்பின் *இணைப்பு iv* இனை பார்க்கவும்) | |

# 1.0 நிறுவன அறிமுகம்

## 1.1 அறிமுகம்

1800 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி, அன்று இலங்கையின் முதலாவது திணைக்களமாக காலியில் நிறுவப்பட்ட, அரசாங்கத்தின் பல்வேறு தேவைகளுக்காக காணிகளை அளத்தல், பல்வேறு தேவைகளுக்காக படங்களை உருவாக்குதல் போன்ற விடயங்களை மிகவும் சிறப்பாகச் செய்து வந்தமையினால் "வளர்ச்சியின் முன்னோடி" என்று அழைக்கப்படும் இலங்கை நில அளவைத் திணைக்களம் 2019 ஆம் ஆண்டிலும் குறிக்கோளுடன் கூடிய நோக்கினை மிகவும் சிறப்பாக அடைந்துள்ளது.

மனிதனின் அடிப்படை உரிமையாகக் கருதப்படும் காணியொன்றின் உரிமையை வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ், 1.1 மில்லியன் நிலப் பிரிவுகள் பகிர்ந்தளிக்கும் செயற்றிட்டத்தை மேற்கொள்ள அரசாங்கம் மற்ற நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து, அந்தச் செயற்றிட்டத்தின் ஆரம்பத் திட்டமான காணித்துண்டுகளை அளத்தலின் கீழ் 65,553 காணித் துண்டுகள் அளக்கப்பட்டு, 30,920 நிலப்படங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றிற்கு மேலதிகமாக அதிவேக நெடுஞ்சாலைகள், நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகளை அளத்தல், பொறியியல் அளத்தல் முறைமையின் கீழ் , நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக அளத்தல், வன / வனப் பாதுகாப்பு இடங்கள் போன்ற பல்வேறு அளத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலத்தின் தேவைப்பாடுகளுக்காக நில அளத்தல் செயற்பாடுகள் போன்ற சிறப்பு அளத்தல்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சிறப்பு நில அளவைப் பிரிவின் மூலம் குறிப்பிட்ட பணிகளைச் செய்யும் போது முன்னேற்றம் அடைந்துள்ளது.

நில அளவைச் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்களின்படி நிலத் தகவல்களைச் சேகரித்தல், நிலத் தகவல்களை தேவைப்படும் பகுதியினருக்கு பயன்படுத்த முடியுமான வகையில் நலனுக்காக நிலத் தகவல்களைச் சேமித்தல், இட விளக்க வரைபடங்கள் / கருப்பொருள் வரைபடங்கள் மற்றும் வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வரைபடங்ளை உருவாக்குதல் ஆகிய செயற்பாடுகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு மூலம் பொதுமக்களுக்கு நிலத் தகவல்களை வழங்குதல் மற்றும் பொது நட்பு சேவையை வழங்குதல், கள அலுவலகங்களிலிருந்து நில அளவுகளை ஆய்வு செய்யத் தயாரிக்கப்பட்ட நில அளவு கோரிக்கை தரவுத்தளத்தை பராமரித்தல் மற்றும் நிருவாக செயற்பாடுகளுக்காக உதவிச் சேவையாக மனிதவள தரவுத்தளத்தை எண்மாண முறையில் (டிஜிட்டல் முறையில்) நிர்வாக சேவையாக பராமரித்தல். திணைக்களத்தின் பௌதீக வளங்களை நிர்வகிக்கத் தேவையான தரவுக் களஞ்சியமாக தொடர்ந்தேர்ச்சையாக நடாத்திச் செல்லுதல் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தேவையான தகவல் வசதிகளை விரைவில் பயன்படுத்த தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதுடன் இணைய மற்றும் மின்னஞ்சல் போன்ற அதியுயர் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

தலைமை அலுவலகத்தின் சகல பிரிவுகளுக்கும் கணினி வலையமைப்பும் இணைய வசதியும் வழங்கப்பட்டுள்ளதுடன், அனைத்துத் தரவுகளும் களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவை பாதுகாப்பாகவும் வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட அலுவலகங்களில் உள்ள பழைய நில வரைபடங்கள் ஸ்கேன் பண்ணப்பட்டு தரவுக் களஞ்சியமொன்றில் சேமிக்கப்பட்டுள்ளதுடன், திணைக்களத்தின் ஊழியர்களை நில அளவைப் பணிக்காக அனுப்பி பயன்படுத்துவதற்கு இணையவழி வசதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல, திணைக்களத்தின் புவியியல் நிருவாக வலையமைப்பை நடாத்திச் செல்லுதல் மற்றும் CORS தொழில்நுட்பத்தின் மூலம் புவியியல் புள்ளியை கண்காணிப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், நிலைப்படுத்தல் வலையமைப்பில் தரவுகளை ஒன்றுசேர்த்தலுக்காக எல்லையை நோக்கிச் சென்றுள்ளது.

திணைக்களத்தின் அளத்தல் செயற்பாடுகளை மிகவும் துரிதப்படுத்துவதற்கு இடைஞ்சலாக அமைந்த அளத்தல் துறைக்கு உதவியாளர்கள் குறைபாட்டினை புதிய ஆட்சேர்ப்பின் மூலம் நிவர்த்தி செய்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாடநெறிகளுக்காக திணைக்களத்தின் அதிகாரிகளை அனுப்பிவைப்பதற்கும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மக்களின் கலாசார உரிமை மற்றும் தேசிய ஒற்றுமைக்கு வலுசேர்க்கும் மிகச் சரியானதும், நிச்சயார்த்தமானதும், பூகோள பெயர்கள் மற்றும் தரவு முறைமையொன்றை தரப்படுத்தல் மூலம் அறிமுகப்படுத்துவதற்காக செயற்படுகின்ற திணைக்களத்தின் புவியியல் பெயர்ப் பிரிவும் குறித்த இலக்கினை அடைந்துள்ளது.

உரித்து பதிவுசெய்யும் சட்டத்திற்கு ஏற்ப, 'பிம் சவிய' திட்டத்தின் கீழ், நாடெங்கிலும் அமைந்துள்ள அனைத்துக் காணிகளையும் அளந்து, வெட்டுமுக வரைபடத்தைத் தயாரித்து, தனியார் காணிச் சொந்தக்காரர்களுக்காக உரித்துச் சான்றிதழ்களை வழங்குவதற்கு பிற நிறுவனங்களுடன் ஒன்றுபட்டு செயற்படுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள உரித்து பதிவு செய்யும் பிரிவின் மூலம், 2019 ஆம் ஆண்டுக்குள் அளத்தல் நடவடிக்கைகளுக்காக எதிர்பார்த்துள்ள 64,800 காணித்துண்டுகளுக்கான இலக்கு 144% வெற்றியை காண்பித்துள்ளதுடன், 93,308 காணித் துண்டுகள் அளக்கப்பட்டுள்ளன.

திணைக்களத்தின் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்து, பிரதேச நில அளவையாளர் அலுவலகங்கள் பலவற்றைப் புதிதாக நிர்மாணித்தல் மற்றும் தற்போதுள்ள அலுவலகங்களுக்குத் அத்தியாவசியமான பழுது பார்த்தல்களைச் செய்துள்ளதுடன், திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு ஒதுக்குவதற்காக கூடுதல் சந்தர்ப்பங்களை வழங்கி, தற்போது நடாத்திச் செல்லப்படுகின்ற உல்லாச பங்களாக்கள் ∴ விடுமுறை நிகேதனங்களின் தரத்தை உயர்த்துவதற்கும் ஆவன செய்யப்பட்டுள்ளன.

பழைய மற்றும் புதிய காணிகளின் அளத்தல் தொடர்பில் தொழில்நுட்ப முறை தொடர்பில் செயன்முறைப் பயிற்சிக்காக வசதிகள் உள்ள, அதற்காக அர்ப்பணிப்புடன் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரே நிறுவனமாக அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் இந்தத் திணைக்களத்தின் கீழ் உள்ள பயிற்சி நிறுவனமாக செயற்படுகின்றது. அத்துடன் 2019 ஆம் ஆண்டுக்கான தனது எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்துள்ளது. அளவையியல் மற்றும் படமாக்கல் தொடர்பில் உயர்தர கல்வி மற்றும் அனுபவங்களை வழங்குவதனூடாக மாணவர்களுக்கு அவர்களின் கல்வியை மேம்படுத்திக் கொள்வதற்கு இந்த நிறுவனமானது தனது வருடாந்த செயற்பணியைச் செயற்படுத்தியுள்ளது.

திணைக்களத்தில் அளத்தலுக்கென்றே நடாத்திச் செல்லப்படுகின்ற பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களுக்கிடையே உற்பத்தித் திறன் போட்டியொன்றை நடாத்தி, அதிகாரிகளின் எண்ணப்பாடுகள் மற்றும் அவர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளதுடன் அந்தப் போட்டியில் வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன.

திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு அவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் ஒன்றுசேர்ந்து கலந்துகொள்ளவியலுமான புதுவருடக் கொண்டாட்டத்தை நடாத்துதல், வெசாக் பண்டிகைக்காக நற்கருமங்கள் திட்டமொன்றை நடாத்துதல், நவராத்திரியை முன்னிட்டு பூசை நடாத்துதல், திணைக்களத்தின் சங்கீத மன்றத்தின் ஒருங்கிணைப்புடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுதேச சேவையில் ஒலிபரப்பாகின்ற 'சேவக சங்கிரஹய' எனும் நிகழ்ச்சியின் கீழ் பாடல்களைப் பாடுவதற்கு திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு வாய்ப்பளித்தல் போன்ற இவ்வாறான நலனோம்புத் திட்டங்களும் குறித்த ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளன.

## 1.2 நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

### நோக்கு

காணித் தகவல்கள் வழங்குவதில்
என்றும் முன்னணியில் நிற்றல்

### செயற்பணி

தொழில்முறை திறனுடன் கூடிய
சேவைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற குழுவினால்
பூமி பற்றிய தரமான தகவல்கள் - தயாரிப்புக்கள் மற்றும்
சேவைகளை வழங்குதல்

## நோக்கங்கள்

கொழும்பு தலைமை அலுவலகத்தினால் நிருவாகிக்கப்படுகின்ற மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள், தியத்தலாவ அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் என்பவற்றோடு நாடளாவிய ரீதியில் பரந்துபட்டுள்ள அலுவலக வலையமைப்பின் மூலம் திணைக்களத்தின் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளன. மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் இந்த அலுவலகங்களின் மூலம் நடைபெற்ற செயற்பாடுகள் கீழ்வரும் நோக்கங்களை இலக்காகக் கொண்டன.

- நில அளவைப் பயிற்சிகள் மற்றும் அளவையியல் மற்றும் படமாக்கலின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தினைப் பூர்த்தி செய்தல்.
- அலுவலர் குழுவினருக்கு பயிற்சி வழங்குதல்.
- குறித்த ஆண்டுக்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான அசையா மற்றும் அசையும் சொத்துக்களை கட்டியெழுப்பி, பேணி வருதல்.
- வழங்கப்பட்ட அரசாங்க நிதியை, ஆண்டுக்குள் நிறைவு செய்ய வேண்டியிருந்த அவ்வவ் நோக்கங்களுக்காக பயன்படுத்துதல்.
- திணைக்களத்தின் அலுவலர் குழுவின் நன்னடத்தைப் பேணுதல் மற்றும் நலன்புரி விடயங்கள் தொடர்பில் செயற்படுதல்.
- நில அளவைகள் தொழிலின் தரம் தொடர்பில் நிருவகித்தல் மற்றும் அதன் தரத்தைப் பேணுதல்.

### 1.3 அடிப்படைச் செயற்பாடுகள்

- புவியியல் கணிப்பு சார் நிருவாக வலையமைப்பு ஒன்றினைத் உருவாக்குதல் மற்றும் 'மிஹி செரசரு சஹசரு' (GNSS) தொழில்நுட்ப முறைமையினை அறிமுகம் செய்து, அதனூடாக கூடிய சீரான தன்மையுடன் கூடிய நில அளவைகளை மேற்கொள்ளல் மற்றும் புவியியல் 'செரிசரு சஹசரு' (GNSS) தொழில்நுட்ப முறைமை மூலம் இலங்கையின் தொடர்ச்சியான செயற்பாட்டு நிருவாகக் கட்டமைப்பு (SLCORS) வலையமைப்புக்களை உருவாக்குவதன் மூலம் புவியியல் கணிப்பு சார்ந்த நில அளவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து கொள்ளலை இலகுவாக்கல்.
- அதிவேகப் பாதைகள், வீதிகளை விசாலமாக்குதல், விமான நிலையங்கள் , துறைமுகங்களை ஆரம்பித்தல், சுற்றுலாத்துறைத் திட்டங்கள், மின் சக்தி மற்றும் வலுச் சக்தி திட்டங்கள் போன்ற பாரிய அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கான அடிப்படைத் தேவைகளான காணி அளத்தல் மற்றும் நிலப்படங்களைத் தயாரித்தல்.
- காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிலங்களை அளந்து, கொடைப்பத்திரங்களை வழங்குவதற்காக நிரல் வரைபடங்களை வழங்கும் நடவடிக்கைகளுக்காக அரசாங்கக் காணிகளில் 1.1. மில்லியன் காணித் துண்டுகளை பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.
- பிரதேச செயலாளர்களிடமிருந்து பல்வேறு தேவைப்பாடுகளின் கீழ் கிடைக்கப்பெறும் நில அளவைக் கோரிக்கைகளுக்கு அமைவாக நில அளவைகளை மேற்கொண்டு, உரிய நிலப்படங்களைச் சமர்ப்பித்தல், சகல நியதிச் சட்டத் தேவைப்பாடுகளுக்குமான நில அளவைச் சேவைகளை வழங்குதல் மற்றும் அதன் பிரதிகள் என்பவற்றை உரிய நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- நீதிமன்றங்களின் தேவைப்பாடுகளுக்கு அமைய, நீதிமன்ற ஆணைக்குழுவின் நில அளவைகளை மேற்கொள்ளல். உரிய தட வரைபடங்களை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தல், தேவையான சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தில் தோன்றி பதில்களை வழங்குதல்.
- 1952 - 2014 காலப்பகுதியில் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட விமான புகைப்படங்களை வரைபடமாக்கல், அபிவிருத்தித் திட்டங்கள், நுகர்வோர் தேவைப்பாடுகள் முதலியவற்றிற்குப் பயன்படுத்தக் கூடியவகையில் வழங்குதல்.
- விமானப் புகைப்படம் மற்றும் செயற்கைக்கோள் புகைப்படத்தைப் பயன்படுத்தி முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் புவியியல் தரவு முறைமையை உருவாக்கி, தரவு முறைமை ஒன்றைத் தயாரித்தல்.

- திணைக்களத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட ஓர் அங்குலத்திற்கு ஒரு மைல் எனும் புவியியல் பண்புகளைக் கொண்ட வரைபடக் கோவையினைத் தயாரித்து, 1:50,000 புவியியல் பண்புகளைக் கொண்ட வரைபடக் கோவையினைத் தயாரித்தல், இற்றைப்படுத்தல், முழு நாட்டையும் உள்ளடக்கி 1:10,000 புவியியல் பண்புகளைக் கொண்ட வரைபடக் கோவையினைத் தயாரித்தல், தொனிப்பொருள் மற்றும் விசேட பணிகளுக்காக வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை வெளியிடுதல்.
- மும்மொழிகளிலும் தேசிய வரைபடக் கோவையை தயாரித்தல்.
- முழு நாட்டையும் உள்ளடக்கி முறையான காணித் தகவல் முறைமை ஒன்றைத் தயாரித்தல்.
- நில அளவையியல் தொழிற்றுறைக்குத் தேவையான தரமாக முறையாக நடாத்திச் செல்லுதல்.
- திணைக்களத்தின் கீழுள்ள நில அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தின் மூலம் பட்டப்படிப்புப் பாடநெறிகள், உயர் டிப்ளோமாப் பாடநெறிகள், டிப்ளோமாப் பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள் நடாத்துவதன் ஊடாக, திணைக்களத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைய உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு செயன்முறைப் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்.
- அரச நிறுவனங்களுக்கு நில அளவை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் சேவைகளை வழங்குதல்.
- திணைக்களத்தின் அலுவலர் குழாத்திற்கு உரிய பரீட்சைகளை நடாத்துதல்.
- காணி அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் என்பவற்றிற்கு உரிய விடயங்கள் தொடர்பாக அவசியப்படக்கூடிய ஆய்வுகளை நடாத்துதல்.
- உரிமைகளைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நில அளவையாளர்களின் கடத்திரள் நில அளவையியல் தொடர்பான நில அளவையாளர்களின் தேர்ச்சி தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்களை வழங்குதல்.
- காணிப் பிணக்குகளைத் தீர்க்கும் சட்டத்தின் கீழ், இறுதிக் கிராம நிலப்படங்கள் மற்றும் புவியியல் பண்புசார் நிலப்படங்களைத் தயாரித்தல்.
- உரிமைகளைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ், நாட்டில் காணப்படும் சகல அரச மற்றும் தனியார் காணிகளை பண அறவீடு இன்றி, நில அளவை செய்து, கடத்திரள் வரைபடங்களைத் தயாரித்து உரிமைச் சான்றிதழ்களை வழங்குவதற்காக காணிப் பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு வழங்கப்படும் 'பிம்சவிய' நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.
- திணைக்களத்தின் ஆரம்பம் முதல் தயாரித்து வந்த நிலப்படங்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்காக தனது காணி உரித்துக்கான நிலப்படம் ஒன்றினை விரைவாகவும் மற்றும் இலகுவாகவும் பெற்றுக்கொள்ளும் வசதியினை வழங்கதல்.
- விண்வெளிசார் தரவுகள் மற்றும் தகவல்களைப் பொதுவாகப் பயன்படுத்துதல் மற்றும் பரிமாறுதல் என்பவற்றிற்காக முறையான தேசிய செயற்றிட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் கொள்கைகளைத் தயாரிப்பதற்கு அவசியமான உதவிகளை இலங்கைத் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வழங்குதல்.
- இலங்கை மக்களின் மரபுரிமையுடன் பின்னிப்பிணைந்த தேசிய ஒற்றுமைக்கு துணை புரியும் சரியானதும், உறுதியானதும், நிச்சயார்த்தமுமான புவியியல் பெயர்கள் மற்றும் தரவு முறைமையினூடாக அறிமுகம் செய்தல்.
- ஒளி கண்டறிதல் மற்றும் வரைதல் சார் தொழில்நுட்பம் என்பவற்றினை இலங்கையில் அறிமுகம் செய்தல் மற்றும் அதனூடாகத் தேவையான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்காக திணைக்களத்தின் கடமைப்பொறுப்புக்கள் மற்றும் பல்வேறு விடயங்களின் கற்கைகளுக்காக பல்வேறு விடயங்களின் கற்கைகளுக்காக கல்விக் கருத்தரங்குகளை நடாத்துதல்.

## 1.4 ஒழுங்கமைப்புக் குறிப்புக்கள்

நில அளவைத் திணைக்களத்தின் நிர்வாக கட்டமைப்பு - 2019



### 1.5 திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள்

நில அளவையாளர் திணைக்களம் 03 முக்கிய பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது.

1. நில அளவையாளர் நாயகம் அலுவலகம்
2. வெளிக்கள அலுவலகம்
3. அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம்

### 01. நில அளவையாளர் அலுவலகம்

நில அளவையாளர் திணைக்களத்தின் முக்கிய பணியாவது, அளவையியல் மற்றும் பட வரைவாகும். அளத்தலானது வெளிக்களச் செயற்பாடாக நாடளாவிய ரீதியில் இருப்பதுடன், முழுமையாக தலைமை அலுவலகத்தின் மூலமே கண்காணிக்கப்படுகின்றது. படமாக்கலின் கீழ் புவியியல் பண்புகளுடன் கூடிய வரைபடங்கள் தயாரித்தல், தொனிப்பொருள் படங்கள் தயாரித்தல், நுகர்வோரின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, வரைபடங்களைத் தயாரித்தல் என்பன தலைமை அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்குத் தேவையான நிலத் தகவல்கள் வான் புகைப்படம், விண்வெளிப் படங்கள் முதலியவற்றின் உதவியோடு வழங்குவதற்காக களஞ்சியப்படுத்துவதும் தலைமை அலுவலகத்திலுள்ள படமாக்கலுடன் தொடர்புடைய கிளைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விடயங்களாகும்.

திணைக்களத்தின் செயற்பாடுகளை உகந்த முறையில் நடாத்துவதற்காக மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம், திணைக்களத்திற்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகள் நில அளவையாளர் நாயக நிறுவனங்கள், களஞ்சியம், கட்டிடங்கள் உபகரணங்கள் எனும் பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படும். திணைக்களத்தின் நிதி முகாமைத்துவம் மற்றும் வெளிக்கள அலுவலகங்களுக்குத் தேவையான ஒதுக்கீடு மற்றும் பணம் பெற்றுக்கொடுத்தல் என்பன தலைமை அலுவலகத்தின் கணக்குப் பிரிவின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக டிஜட்டல் தரவினைப் பேணுதல் மனித, பௌதீக வள முகாமைத்துவகத்திற்குத் தேவையான தரவு முறைமையை நடாத்திச் செல்லுதல், அளத்தல் தொடர்பான வேண்டுகோள்களுக்கான தரவு முறைமையை நடாத்திச் செல்லுதல் முதலிய அனைத்துத் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாடல் நடவடிக்கைகள் மற்றும் இணையத்தளத்தை நடாத்திச் செல்லுதல் போன்றனவும் தலைமை அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு உள்ளிட்ட தொழில்நுட்பப் பிரிவின் ஒருங்கிணைப்பிலேயே நடைபெறுகின்றன. திணைக்களத்தின் அனைத்து சட்ட நடவடிக்கைகளும் சட்டப் பிரிவின் மூலமே மேற்கொள்ளப்படுவதுடன் விசேட அளத்தல் நடவடிக்கைகளுக்காக தலைமை அலுவலகத்தில் விசேட அளத்தல் அலகு ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. புவியியல் பிரிவின் மூலம் அனைத்து கிடைமட்ட மற்றும் செங்குத்து நிருவாகப் புள்ளிகள் உருவாக்குதல் மற்றும் நிருவாக வலையமைப்பினை நடாத்துதல் மற்றும் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

(நில அளவையாளர் நாயகம் அலுவலகத்தின் பிரிவின் மூலம் நடைபெறுகின்ற விடயங்கள் தொடர்பிலான விபரங்களை *இணைப்பு i* இல் பார்க்கவும்.)

### 02. வெளிக்கள அலுவலகம்

அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் காணிகளை அளத்தல், பொதுமக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்குதல் முதலிய விடயங்களுக்குத் தேவையான அடிப்படை விடயங்களாக காணிகளை அளத்தல், காணிகளுக்கான உரிமைகள் தொடர்பிலான பிணக்குகளைத் தீர்ப்பதற்காக 'பிம் சவிய' திட்டத்தின் கீழ் கணிகளை அளத்தல், பிணக்குகள் நிலவுகின்ற சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்படும் ஆணைகளுக்கு ஏற்ப, பல்வேறு அளத்தல் தேவைப்பாடுகளையும் நிறைவேற்றுவதற்காக மாகாண நில அளவையாளர் அலுவலகங்கள் 09, மாவட்ட நில அளவையாளர் அலுவலகங்கள் 25 மற்றும் பிரதேச நில அளவையாளர் அலுவலகங்கள் 89 என்பன திணைக்களத்தின் மூலம் நடாத்திச் செல்லப்படுகின்றன.

(வெளிக்களப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அளத்தல்கள் தொடர்பிலான விபரங்களை *இணைப்பு ii* இல் பார்க்கவும்.)

### 03. அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் - தியத்தலாவ

பழைய மற்றும் நவீன காணி அளத்தல் தொழில்நுட்ப முறைமை பற்றிய செயன்முறைப் பயிற்சிக்கான வசதிகளைக் கொண்ட, அதற்காக அர்ப்பணிப்புடன் நிற்கின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரே நிறுவனமாக செயற்படுவதுடன், அளவையியல் மற்றும் படமாக்கல் தொடர்பில் உயர் தரத்தில் கல்வி மற்றும் அனுபவத்தையும் வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இந்நிறுவனமானது, 1969 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. 1990.07.04 ஆம் திகதியிலான விசேட வர்த்தமானி அறிக்கையில் அளவையியல் விஞ்ஞானம் தொடர்பிலான பட்டத்தை வழங்கக் கூடிய நிறுவனமாக 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் இந்நிறுவனம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் நோக்கமாக ஆசிய வலயத்தில் புவியியல் தகவல்கள் தொடர்பிலான கல்வியின் கேந்திர நிலையமாக விளங்கிச் செயற்பட்டு வருகின்ற அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தின் மூலம் தற்போது, அளவையியல் விஞ்ஞானம் தொடர்பான 4 வருட பட்டப் படிப்பு மற்றும் உயர் டிப்ளோமாப் பாடநெறி, படமாக்கல் விஞ்ஞானம், தொலை தூர ஒளிப்படப்பிடிப்புத் தொழில்நுட்பம், வானியல் புகைப்பட ரேகையியல், நிலப்படத்தை (புலப்படம்) நிற அச்சீட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அச்சிடுதல், லித் தோ அச்சிடுதல் தொழில் தொழில்நுட்பம் தொடர்பிலான இரு வருட உயர் டிப்ளோமா பாடநெறி மற்றும் நில அளவைத் துறைக்கான உதவியாளர்களுக்கான தேசிய தொழில்சார் தகைமையைப் பெற்றுக்கொடுத்தல் (NVQ 2,3 மட்டங்கள்) ஆகிய பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

அதேபோன்று, திணைக்களத்தின் தொழில்நுட்ப அலுவலர் சபையின் திறமைகள் மற்றும் அறிவினை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழிற்றுறை அபிவிருத்திப் பாடநெறிகளும் ஆண்டுதோறும் தொடர்ந்தேர்ச்சியாக இந்நிறுவனத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

இவற்றிற்கு மேலதிகமாக அரசாங்கத்தினதும் பிற அரை அரசு நிறுவனங்களினதும் (Semi Government Organizations ) வேண்டுகோளின்படி, தொழில்நுட்பவியல் பணிக்குழுவினருக்கான மற்றும் அளத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக கல்வி நிலையங்களின் சிவில் பொறியியல் துறை மாணவர்களுக்கான அளத்தல் முகாம்கள் எனும் பெயரில் உள்ள செயன்முறைப் பயிற்சி வேலைத்திட்டங்களை ஏற்பாடுசெய்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

(வெளிக்களப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அளத்தல்கள் தொடர்பிலான விபரங்களை *இணைப்பு iii* இல் பார்க்கவும்.)

## 2.0 முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்கு

**விசேட பணிகள்**

**உற்பத்தித் திறன் நிகழ்ச்சித் திட்டத்தை நில அளவையாளர் திணைக்களத்தில் தொடர்ந்தேர்ச்சியாக செயற்படுத்துதல்**

நில அளவையாளர் திணைக்களத்தின் செயலாற்றுகையை உயர் தேர்ச்சி மட்டத்தை அடைவதற்கு வெளிக்கள அலுவலகங்களின் தொடர்ந்தேர்ச்சியான பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது மிகத் தேவையானது என்பதால் அதற்காக ஊழியர்களின் திருப்தியை உயர்த்தி, குழுக்களிடையே ஒருமைப்பாட்டை மேலோங்கச் செய்து, பொதுமக்களிடையே நட்புறவு மற்றும் சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குத் தேவையான அனைத்து நில அளவையாளர் அலுவலகங்களிடையே 2019 ஆம் ஆண்டு போட்டியொன்று நடாத்தப்பட்டது. அந்தப் போட்டிக்காக பிரதேச நில அளவையாளர் /புவியியல் அலுவலகங்கள் 83 பங்குபற்றியதுடன், அதில் வெற்றிபெற்ற பிரதேச நில அளவையாளர் அலுவலகம் /புவியியல் அலுவலகத்திற்காக பரிசில் வழங்கப்பட்டது.

**சவால்கள்**

முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் அனைத்து காணித் துண்டுகளையும் அலகுகளாக பிரித்து அளந்து, தரவு முறைமைக்குள் உள்ளீடு செய்தல்.

**எதிர்கால இலக்கு**

குறைந்த காலப்பகுதியில் பொதுமக்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான முறையை ஒழுங்கு செய்தல்.

## 3.0 ஆண்டுக்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை

சீஏ- எப்

**2019. டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| பாதீட்டு 2019 | | குறிப்பு | உண்மை நிலை 2019 | உண்மை நிலை 2018 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | 608,799,198 | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ -1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ -1 |
| | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ -1 |
| 420,000,000 | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 432,574,895 | 608,799,198 | ஏசீஏ -1 |
| | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | 432,574,895 | 608,799,198 | |
| - | **வருமானம் பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 3,327,805,057 | 3,310,298,068 | ஏசீஏ -3 |
| | வைப்புகள் | | 83,925,709 | 85,386,809 | ஏசீஏ -4 |
| 122,000,000 | முற்பணக் கணக்குகள் | | 156,284,512 | 159,100,318 | ஏசீஏ -5/5(ஏ) |
| - | ஏனைய பெறுகைகள் | | 186,865,117 | 36,608,792 | |
| | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | 3,754,880,395 | 3,591,393,987 | |
| | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | 4,187,455,290 | 4,200,193,185 | |
| | **கழி : செலவினம்** | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| 3,329,750,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 3,241,701,748 | 3,046,226,915 | ஏசீஏ -2(ii) |
| 455,550,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 429,778,459 | 417,675,424 | ஏசீஏ -2(ii) |
| 20,950,000 | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 20,149,194 | 19,545,636 | ஏசீஏ -2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ -2(ii) |
| 100,000 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 40,715 | 94,705 | ஏசீஏ -2(ii) |
| 3,806,350,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | 3,691,670,116 | 3,483,542,680 | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 83,000,000 | முலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 59,933,591 | 72,391,980 | ஏசீஏ -2(ii) |
| 237,100,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 96,281,512 | 135,304,836 | ஏசீஏ -2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ -2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | | ஏசீஏ -2(ii) |
| 3,100,000 | மனித வள அபிவிருத்தி | 14 | 2,195,218 | 1,586,313 | ஏசீஏ -2(ii) |
| 10,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 5,921,093 | 16,738,850 | ஏசீஏ -2(ii) |
| 333,200,000 | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **164,331,414** | **226,021,979** | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **206,720,626** | **235,548,383** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 72,703,236 | 77,828,762 | ஏசீஏ -4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 134,017,390 | 157,719,621 | ஏசீஏ -5/5(ஏ) |
| | **மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)** | | 4,062,722,156 | 3,945,113,042 | |
| - | **2019. டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)** | | 124,733,134 | **255,080,143** | |

3.3 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பி

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 7,873,300,145 | 7,703,657,753 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 351,859,562 | 374,126,685 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | 255,080,143 |
| **மொத்த சொத்துக்கள்** | | 8,225,159,707 | 8,332,864,581 |
| **தேறிய சொத்துக்கள் ∴ உரிமைப் பங்கு** | | | |
| தேறிய பெறுமதி | | 331,550,048 | 351,809,990 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 7,873,300,145 | 7,703,657,753 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பி | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசீஏ-4 | 11,094,222 | 22,316,695 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 9,215,292 | 255,080,143 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 8,225,159,707 | 8,332,864,581 |

பக்க இலக்கம் 1 முதல் 36 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 37 முதல் 55 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ........................ | AKL Perer ........ | ........................................ |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : P.D. Savi... |
| பதவி : | பதவி : | |
| திகதி : 2020/02/26 | திகதி : 2020-02-26 | திகதி : 2020/02/26 |
| R.A.A.K. Ranawake<br>Secretary<br>Ministry of Land & Land Development<br>"Mihikatha Medura" Land Secretariat<br>No. 1200/6, Rajamalwatta Avenue,<br>Battaramulla. | A.L. Shyamalie Chitraleka Perera<br>Surveyor General<br>Surveyor General's Office<br>Colombo 05. | Director<br>Survey Department<br>Colombo 05. |

## 3.4 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

### 2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2019 ரூபா. | 2018 ரூபா. |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 432,574,895 | 3,955,706,058 |
| ஏனைய செலவின தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 186,865,117 | |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 3,327,805,057 | |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **3,947,245,069** | **3,955,706,058** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | **3,668,306,387** | **3,463,997,044** |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | **20,149,194** | **19,545,636** |
| ஏனைய செலவின தலைப்புக்களுக்காக மேற்கொன்னப்பட்ட செலவினம் | 165,077,519 | |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 186,935 | - |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **3,853,720,035** | **3,483,542,680** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **93,525,034** | **472,163,378** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை | - | - |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | 156,284,512 | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **156,284,512** | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | **95,354,391** | 226,021,979 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 134,017,390 | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **229,371,781** | **226,021,979** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(73,087,269)** | **(226,021,979)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ - ஊ)** | **20,437,765** | **246,141,399** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| கிடைக்கப்பெற்ற வைப்புக்கள் | 83,925,709 | |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **83,925,709** | - |
| **கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வைப்புகளின் கொடுப்பனவுகள் | 72,703,236 | 8,938,744 |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **72,703,236** | **8,938,744** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)ஶ்ரீ(ஏ)-(ஐ)** | 11,222,473 | **(8,938,744)** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)ஶ்ரீ(எ) -(ஒ)** | 9,215,292 | 255,080,143 |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

## 3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இல்லை.

### 3.6 வருமான சேகரிப்புச் செயலாற்றுகை

ரூபா. 000

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு விகிதாசாரத்தில் |
| 200.302.00 | நில அளவை நாயகத்தின் வருமானம் | 420,000.00 | 420,000.00 | 432,000.00 | 102% |

## 3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா. 000

| ஒதுக்கீட்டு வகை | | | | | ஒதுக்கீடு | | உண்மையான செலவீனம் | இறுதி ஒதுக்கீட்டின் சதவீதமாக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீள் நிகழ்வு | | | | | | | | |
| தனிப்பட்ட வேதனம் | | | | | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 288 | 1 | 1 | 1001 | சம்பளம் மற்றும் ஊதியம் | 125,300,000.00 | 125,300,000.00 | 124,507,801.63 | 99.37 |
| 288 | 1 | 1 | 1002 | மேலதிக நேரத்திற்கான மற்றும் விடுமுறைக்கான சம்பளம் | 1,700,000.00 | 1,700,000.00 | 1,689,389.89 | 99.38 |
| 288 | 1 | 1 | 1003 | பிற கொடுப்பனவுகள் | 44,000,000.00 | 44,000,000.00 | 39,324,392.95 | 89.37 |
| 288 | 1 | 1 | 1101 | உள்நாட்டு | 900,000.00 | 900,000.00 | 899,980.82 | 100 |
| 288 | 1 | 1 | 1102 | வெளிநாட்டு | 3,000,000.00 | 3,000,000.00 | 2,756,001.94 | 91.87 |
| 288 | 1 | 1 | 1201 | காகிதாகிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 2,600,000.00 | 2,600,000.00 | 2,566,837.28 | 98.72 |
| 288 | 1 | 1 | 1202 | எரிபொருள் | 5,000,000.00 | 5,000,000.00 | 4,837,220.88 | 96.74 |
| 288 | 1 | 1 | 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 200,000.00 | 200,000.00 | 148,000.00 | 74 |
| 288 | 1 | 1 | 1205 | மற்றவை | 500,000.00 | 500,000.00 | 467,504.61 | 93.5 |
| 288 | 1 | 1 | 1301 | வாகனங்கள் | 4,000,000.00 | 4,000,000.00 | 2,991,898.10 | 74.8 |
| 288 | 1 | 1 | 1302 | ஆலை, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 600,000.00 | 600,000.00 | 517,061.17 | 86.18 |
| 288 | 1 | 1 | 1401 | போக்குவரத்து | 8,000,000.00 | 8,000,000.00 | 7,800,000.00 | 97.5 |
| 288 | 1 | 1 | 1402 | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 5,300,000.00 | 5,300,000.00 | 5,084,779.60 | 95.94 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 288 | 1 | 1 | 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 19,600,000.00 | 19,600,000.00 | 17,293,615.79 | 88.23 |
| 288 | 1 | 1 | 1404 | வாடகை மற்றும் உள்ளூர் வரி | 5,450,000.00 | 5,450,000.00 | 5,308,332.90 | 97.4 |
| 288 | 1 | 1 | 1409 | மற்றவை | 14,000,000.00 | 14,000,000.00 | 13,051,852.58 | 93.23 |
| 288 | 1 | 1 | 1506 | அரசு ஊழியர்களுக்கான சொத்து கடன் வட்டி | 20,700,000.00 | 20,700,000.00 | 20,008,627.07 | 96.66 |
| 288 | 1 | 1 | 1703 | அரச மொழிக் கொள்கையை செயல்படுத்துதல் | 100,000.00 | 100,000.00 | 40,715.00 | 40.72 |
| 288 | 2 | 2 | 1001 | சம்பளம் மற்றும் ஊதியம் | 2,123,000,000.00 | 2,123,000,000.00 | 2,091,438,014.67 | 98.51 |
| 288 | 2 | 2 | 1002 | கூடுதல் நேரம் மற்றும் விடுமுறை ஊதியம் | 9,250,000.00 | 9,250,000.00 | 8,242,524.40 | 89.11 |
| 288 | 2 | 2 | 1003 | பிற கொடுப்பனவுகள் | 936,500,000.00 | 936,500,000.00 | 886,995,045.12 | 94.71 |
| 288 | 2 | 2 | 1101 | உள்நாட்டு | 125,000,000.00 | 125,000,000.00 | 120,435,718.05 | 96.35 |
| 288 | 2 | 2 | 1201 | நிலையான மற்றும் அலுவலக உள்ளூர் தேவைகள் | 10,500,000.00 | 10,500,000.00 | 9,514,365.16 | 90.61 |
| 288 | 2 | 2 | 1202 | எரிபொருள் | 36,000,000.00 | 36,000,000.00 | 34,566,343.09 | 96.02 |
| 288 | 2 | 2 | 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 1,150,000.00 | 1,150,000.00 | 1,136,000.00 | 98.78 |
| 288 | 2 | 2 | 1205 | வரைபடமாக்கலுக்குத் தேவையான எல்லைக் கற்கள் மற்றும் பிறவற்றிற்கு தேவையான பொருட்கள் | 13,800,000.00 | 13,800,000.00 | 13,122,346.18 | 95.09 |
| 288 | 2 | 2 | 1301 | வாகனங்கள் | 25,500,000.00 | 25,500,000.00 | 23,517,823.51 | 92.23 |
| 288 | 2 | 2 | 1302 | ஆலை, எழுதுபொருள் மற்றும் அலுவலக உள்ளூர் தேவைகள் | 1,000,000.00 | 1,000,000.00 | 949,231.58 | 94.92 |
| 288 | 2 | 2 | 1303 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 1,500,000.00 | 1,500,000.00 | 1,456,361.75 | 97.09 |
| 288 | 2 | 2 | 1401 | போக்குவரத்து | 33,000,000.00 | 33,000,000.00 | 30,281,280.61 | 91.76 |
| 288 | 2 | 2 | 1402 | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 33,500,000.00 | 33,500,000.00 | 33,320,164.36 | 99.46 |
| 288 | 2 | 2 | 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 8,700,000.00 | 8,700,000.00 | 8,287,345.84 | 95.26 |
| 288 | 2 | 2 | 1404 | வீட்டு வாடகை | 62,550,000.00 | 62,550,000.00 | 59,324,051.54 | 94.84 |
| 288 | 2 | 2 | 1408 | இயக்க குத்தகையின் கீழ் உள்ள வாகனங்களுக்கு குத்தகை வாடகை | 12,500,000.00 | 12,500,000.00 | 10,335,120.00 | 82.68 |
| 288 | 2 | 2 | 1409 | மற்றவை | 6,600,000.00 | 6,600,000.00 | 6,347,720.95 | 96.18 |
| 288 | 2 | 2 | 1505 | சந்தா மற்றும் சந்தா கட்டணம் | 250,000.00 | 250,000.00 | 140,566.95 | 56.23 |
| 288 | 2 | 3 | 1001 | சம்பளம் மற்றும் ஊதியம் | 65,000,000.00 | 65,000,000.00 | 65,000,000.00 | 100 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 288 | 2 | 3 | 1002 | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை ஊதியம் | 550,000.00 | 550,000.00 | 549,594.79 | 99.93 |
| 288 | 2 | 3 | 1003 | வாழ்க்கை செலவு கொடுப்பனவு | 24,450,000.00 | 24,450,000.00 | 23,954,984.77 | 97.98 |
| 288 | 2 | 3 | 1101 | உள்ளூர் | 850,000.00 | 850,000.00 | 484,198.00 | 56.96 |
| 288 | 2 | 3 | 1201 | காகிதாகிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 1,000,000.00 | 1,000,000.00 | 782,664.98 | 78.27 |
| 288 | 2 | 3 | 1202 | எரிபொருள் | 1,800,000.00 | 1,800,000.00 | 1,667,847.45 | 92.66 |
| 288 | 2 | 3 | 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 50,000.00 | 50,000.00 | 50,000.00 | 100 |
| 288 | 2 | 3 | 1301 | வாகனங்கள் | 1,000,000.00 | 1,000,000.00 | 713,232.37 | 71.32 |
| 288 | 2 | 3 | 1302 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 100,000.00 | 100,000.00 | 100,000.00 | 100 |
| 288 | 2 | 3 | 1303 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 200,000.00 | 200,000.00 | 200,000.00 | 100 |
| 288 | 2 | 3 | 1401 | போக்குவரத்து | 1,800,000.00 | 1,800,000.00 | 1,800,000.00 | 100 |
| 288 | 2 | 3 | 1402 | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 1,200,000.00 | 1,200,000.00 | 1,099,455.11 | 91.62 |
| 288 | 2 | 3 | 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 1,500,000.00 | 1,500,000.00 | 1,417,366.18 | 94.49 |
| 288 | 2 | 3 | 1409 | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 5,600,000.00 | 5,600,000.00 | 5,146,736.45 | 91.91 |
| | | | | **மூலதனம்** | | | | |
| 288 | 1 | 1 | 2001 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 15,000,000.00 | 15,000,000.00 | 6947159.26 | 46.31 |
| 288 | 1 | 1 | 2002 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,200,000.00 | 1,200,000.00 | 912882.36 | 76.07 |
| 288 | 1 | 1 | 2003 | வாகனங்கள் | 2,200,000.00 | 2,200,000.00 | 146117.08 | 6.64 |
| 288 | 1 | 1 | 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 3,400,000.00 | 3,400,000.00 | 3311178.67 | 97.39 |
| 288 | 1 | 1 | 2103 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 14,200,000.00 | 14,200,000.00 | 11391929 | 80.22 |
| 288 | 1 | 1 | 2104 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 40,000,000.00 | 40,000,000.00 | 40000000 | 100 |
| 288 | 1 | 1 | 2401 | பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு | 1,000,000.00 | 1,000,000.00 | 782070.21 | 78.21 |
| 288 | 2 | 2 | 2001 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 26,000,000.00 | 26,000,000.00 | 23524422.07 | 90.48 |
| 288 | 2 | 2 | 2002 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 12,500,000.00 | 12,500,000.00 | 10043108.22 | 80.34 |
| 288 | 2 | 2 | 2003 | வாகனங்கள் | 22,500,000.00 | 22,500,000.00 | 17166487.05 | 76.3 |
| 288 | 2 | 2 | 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 8,000,000.00 | 8,000,000.00 | 3995998.27 | 49.95 |
| 288 | 2 | 2 | 2103 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 120,000,000.00 | 120,000,000.00 | 11343194.49 | 9.45 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 288 | 2 | 2 | 2104 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 50,000,000.00 | 50,000,000.00 | 24788830.38 | 49.58 |
| 288 | 2 | 2 | 2401 | பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு | 1,000,000.00 | 1,000,000.00 | 830143.73 | 83.01 |
| 288 | 2 | 2 | 2509 | பிற மூலதன செலவுகள் | 10,000,000.00 | 10,000,000.00 | 5921092.65 | 59.21 |
| 288 | 2 | 3 | 2001 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 1,500,000.00 | 1,500,000.00 | 0 | - |
| 288 | 2 | 3 | 2002 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 800,000.00 | 800,000.00 | 518534.49 | 64.82 |
| 288 | 2 | 3 | 2003 | வாகனங்கள் | 1,300,000.00 | 1,300,000.00 | 674881.35 | 51.91 |
| 288 | 2 | 3 | 2103 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,500,000.00 | 1,500,000.00 | 1450380.59 | 96.69 |
| 288 | 2 | 3 | 2401 | பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு | 1,100,000.00 | 1,100,000.00 | 583004.04 | 53 |
| | | | | | **4,139,550,000.00** | | **3,856,001,529.98** | |

### 3.7 நி.பி குறிப்பு 208 இற்கு ஏற்ப, இந்தத் திணைக்களத்திற்காக பிற அமைச்சொன்றின் /திணைக்களமொன்றின் முகவர் ஒருவராக ஒதுக்கீட்டினை வழங்குதல்.

ரூபா. 000

| தொடர் இலக்கம் | ஒதுக்கீட்டினை வழங்கிய அமைச்சு /திணைக்களம் | ஒதுக்கீட்டை ஒதுக்கிதற்கான நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் சதவீதமாக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 1. | தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் (311) | நில அளவைக் கட்டணம் | 310,500.00 | 310,500.00 | 310,500.00 | 100 |
| 2. | சுற்றுலா அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சு (159) | நில அளவைக் கட்டணம் | 78,579.50 | 78,579.50 | 78,579.50 | 100 |
| 3. | இலங்கை விமானப் படை (224) | வரைபடங்கள் விற்றல் | 1,780,000.00 | 1,780,000.00 | 1,780,000.00 | 100 |

### 3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா. 000

| ஆதனக் குறியீடு | குறியீட்டு விபரம் | 2019.12.31 திகதிக்கான சுற்றாய்வுச் சபை அறிக்கைப் படி மீதி | 2019.12.31 திகதிக்கான நிதி நிலைமை அறிக்கைப் படி மீதி | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்ற வீதம் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 1,222,234,842..92 | 1,222,234,842.92 | - | - |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 952,143,756.09 | 952,143,756.09 | - | - |
| 9153 | காணி | 5,689,157,500.00 | 5,689,157,500.00 | - | - |
| 9154 | அருவமான சொத்துக்கள் | - | - | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நடைபெறும் பணிகள் | 9,764,046.44 | 9,764,046.44 | - | - |
| 9180 | குத்தகைச் சொத்துக்கள் | - | - | - | - |

### 3.9 கணக்கு தணிக்கை அறிக்கை

தயவுசெய்து சிங்களப் பதிப்பின் *இணைப்பு iv* இனை பார்க்கவும்.

## 4.0 செயலாற்றுகைச் சுட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| குறிப்பீட்டுச் சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சத வீதமாக உண்மையான வெளியீடு | | | |
|---|---|---|---|---|
| | >100% | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| கணக்கெடுப்பு செயல்பாடுகள் | | | | |
| எல்லைக் கல் நட்டலின் அளத்தல் | √ | | | |
| பல்வேறு அளத்தல் | √ | | | |
| நிலம் கையகப்படுத்தும் அளத்தல் | √ | | | |
| பொறியியல் அளத்தல் | √ | | | |
| பட வரைபிற்காக நிருவாகப் புள்ளிகளை அமைத்தல் | √ | | | |
| நீதிமன்ற ஆணைக்குழு - அளத்தல் | | √ | | |
| நிருவாகப் புள்ளிகளை நிறுவுதல் | √ | | | |
| சிறப்பு அளவைகள் | √ | | | |
| **படமாக்கல் பணிகள்** | | | | |
| புவியியல் பண்புகள் மற்றும் தொனிப் பொருள் படங்கள் | | √ | | |
| அச்சிடல் நடவடிக்கைகள் | √ | | | |
| புவியியல் தரவு முறைமை இற்றைப்படுத்துதல் மற்றும் தயாரித்தல் | | √ | | |
| கடத்திரள் படங்களுக்காக காணித் தகவல் முறைமைத் தயாரித்தல். | √ | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| கதிர்வீச்சு அளத்தலுக்காக காணித் தகவல் முறைமையைத் தயாரித்தல். | | √ | | |
| எதிர்கால அளத்தல்களை புதுப்படுத்துதல். | √ | | | |
| மாவட்ட அலுவலகங்களின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட தரவுகளின் மூலம் காணித் தரவு முறைமையை புதுப்பித்தல் மற்றும் நடாத்திச் செல்லுதல். | √ | | | |
| LiDAR தரவினைப் பயன்படுத்தி DEM/DSM தயாரித்தல் | √ | | | |
| 10k தரவுக் களஞ்சியத்தைப் புதுப்பித்தலுக்காக 2D தரவுகளை ஒன்றுசேர்த்தல் | | | √ | |
| நுகர்வோரின் வேண்டுகோளின் பேரில் வான் புகைப்படங்களை மீண்டும் அச்சிடுதல் | √ | | | |
| 50K புவியியல் பண்புகளை உள்ளடக்கிய தரவு களஞ்சியத்தை புனர்நிர்மாணித்தல் | | | √ | |
| 10k தரவுக் களஞ்சியத்தை இற்றைப்படுத்துதல். | | √ | | |
| பயனர் தேவைகளுக்கான உள்ளீடுகள் | √ | | | |
| பரீட்சைகளை நடாத்துதல் | | | √ | |
| **அளத்தல் பயிற்சி** | | | | |
| நீண்ட காலப் பாடநெறிகள் | | | | √ |
| குறுங்காலப் பாடநெறிகள் | | | √ | |
| **பிம்சவிய திட்டம்** | | | | |
| உரித்து பதிவு செய்வதற்காக கடத்திரள் வரைபடங்களைத் தயாரித்தல் | √ | | | |

## 5.0 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை (SDG)

### 5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

| இலக்கு / குறிக்கோள் | அடைவுகள் | குறிகாட்டிகள் | இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% -100% | >100% |
| அபிவிருத்தி, முதலீடு மற்றும் விவசாய நோக்கங்களுக்காக அளத்தல் தரவுகளை தயாரித்தல் | அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணி அளத்தல் மற்றும் தரவுக் களஞ்சியதைத் தயாரித்தல். | அளக்கப்பட்ட பிரதேசம் மற்றும் காணித் துண்டுகளின் எண்ணிக்கை | | | | √ |
| விண்வெளி சார் தரவுப் பகுப்பாய்வுக்காக வரைபடங்களைத் தயாரித்தல். | அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வரைபடங்களைத் தயாரித்தல் | வரைபடம், தரவு முறைமைகளின் எண்ணிக்கை | | | | √ |
| அலுவலர் சபையை சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்காக அளத்தற் பயிற்சி | தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | பரீட்சை / பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை | | | | √ |

5.2 பேண்தகு அபிவிருத்தி இலகுக்குகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப அடிப்படை நோக்கங்கள் மூன்றின் கீழ் செயற்படுவதற்கு ஆவன செய்யப்படவுள்ளது. அதற்கேற்ப, அளத்தற் தரவு தயாரித்தலின் கீழ் 122% வீத முன்னேற்றத்தை எட்டியுள்ளதுடன், படமாக்கலின் கீழ் 103% வெற்றியையும், பயிற்சியளித்தலின் கீழ் 103% வீத வெற்றியையும் அடைந்துள்ளோம். இங்கு திணைக்களத்தின் முன்னுள்ள அடிப்படைச் சவாலாக இருப்பது பௌதீக வளப் பற்றாக்குறை மற்றும் குறித்த காலப்பகுதிகளில் ஏற்படுகின்ற தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் மற்றும் அவற்றை அண்மிப்பதற்குத் தேவையான வளங்கள் இல்லாமையே ஆகும்.

## 6.0 மனித வள விபரம்

### 6.1 பதவியணி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை | தற்போதுள்ள பதவியணியின் எண்ணிக்கை | பதவி வெற்றிடம் / (அதிகப்படியான) எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 1142 | 979 | 163 |
| மூன்றாம் நிலை | 83 | 42 | 41 |
| இரண்டாம் நிலை | 1172 | 984 | 188 |
| ஆரம்ப நிலை | 4890 | 4065 | 825 |
| மொத்தம் | 7287 | 6070 | 1217 |

6.2 இந்தத் திணைக்களமானது தொழில்நுட்ப விடயங்கள், அலுவலகத்தின் சாதாரண செயற்பாடுகள் மற்றும் அந்தச் செயற்பாடுகளுடன் இணைந்த நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பல்வேறு நிலைகளிலுள்ள உத்தியோகத்தர்களை உள்ளடக்கியுள்ளது. அவர்களுள் இலங்கை நில அளவையாளர் சேவையின், ஒன்றிணைந்த சேவை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் வெற்றிடங்கள் பல கருத்திற் கொள்ளக்கூடிய அளவில் உள்ளன. மேலும் எந்தவொரு போக்குவரத்து அலுவலரும் கட்டிட நிர்வாகியும் திணைக்களத்துடன்

இணைக்கப்படவில்லை. மற்றும் திணைக்களத்தின் பெருஞ் செல்வமான நிலப்படங்களை அதன் தரம் கெடாமல் பாதுகாப்பதற்குத் தேவையான சேவையை வழங்குகின்ற நிலப்படவியலாளர்களின் பற்றாக்குறையும் திணைக்களத்தின் செயற்பாடுகளில் பெரும் பாதிப்பைச் செலுத்துகின்றது.

தற்போது நிலவுகின்ற சாரதிகள் வெற்றிடத்தை பிற துறைகளில்உள்ள அலுவலர்களைக் கொண்டு நிறைவு செய்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளதுடன், சிங்கள - தமிழ் மொழிபெயர்ப்பும் திணைக்களத்திற்கு வெளியிலுள்ள மொழிபெயர்ப்பாளர் ஒருவருக்கு பணம் செலுத்தியே செய்யப்படுகின்றது. மிக நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்த அளத்தல் உபகர தொழில்நுட்ப அலுவலர் வெற்றிடம் மற்றும் லித்தோ தொழில்நுட்ப அலுவலர் வெற்றிடம் என்பன தற்போது பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன், அலுவலகங்களில் சாதாரண விடயங்கள் மேலதிக நேரக் கொடுப்பனவின் மூலம் அலுவலர்களை பணியில் அமர்த்தி பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

திணைக்களத்திற்கு இணைத்துக்கொள்ள வேண்டிய அலுவலர்களின் குறித்தளவு எண்ணிக்கையுடைய வெற்றிடம் இருந்தபோதும், குறித்த பணிகளைச் சரிவர முகாமைத்துவம் செய்ததன் ஊடாக திணைக்களத்தின் செயற்பாடுகளில் அதிக முன்னேற்றத்தைக் காண முடிந்துள்ளது.

### 6.3 மனித வள அபிவிருத்தி

| பாடநெறி | அலுவலர்களின் எண்ணிக்கை | கால எல்லை | மொத்த முதலீடு (ரூபா. '000) | | பாடநெறியின் இயல்பு (வெளிநாட்டு /உள்நாட்டு | பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| **நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட பாடநெறிகள்** | | | | | | |
| ஆவண பழுதுபார்ப்பு தொடர்பிலான செயன்முறைப் பயிற்சி பட்டறை | 11 | 03 நாட்கள் | 21,665.00 | _ | உள்நாட்டு | இந்தப் பாடநெறியில் கலந்துகொண்ட அனைத்து அதிகாரிகளும் தங்களது பாடப் பரப்பு தொடர்பில் போதிய அறிவைப் பெற்றுக் கொண்டுள்ளனர். |
| நில அளவையாளர் திணைக்களத்தின் அலுவலல்களுக்காக ArcGIS தொழில்நுட்பம் தொடர்பிலான பயிற்சிப் பட்டறை | 35 | 03 நாட்கள் | – | – | உள்நாட்டு | |
| அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தின் ஆய்வுப் பயிற்சிக்கான G-Suite தொடர்பிலான பட்டறை | 24 | 02 நாட்கள் | – | – | உள்நாட்டு | |
| எண்மான ஏடு தொடர்பில் விஷேட கலந்துரையாடல் | 22 | 02 நாட்கள் | – | – | உள்நாட்டு | |
| சிரேஷ்ட உத்தியோகததர்களுக்கான கொள்முதல் செயன்முறை குறித்த பயிற்சிப் பட்டறை | 117 | 01 நாள் | 69,255.00 | – | உள்நாட்டு | |
| கொள்முதல் செயன்முறை குறித்த பயிற்சிப் பட்டறை | 74 | 01 நாள் | 56,375.00 | – | உள்நாட்டு | |
| **பிற நிறுவனங்களின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட குறுங்காலப் பாடநெறிகள் தொடர்பிலான விபரம்** | | | | | | |
| ஓஃப்ஸட் லிதோ அச்சிடல் முறை தொடர்பிலான பாடநெறி | 02 | 02 நாட்கள் | 3,600.00 | _ | உள்நாட்டு | |
| செயன்முறை மற்றும் முகாமைத்துவம் தொடர்பிலான பாடநெறி | 02 | 02 நாட்கள் | 17,000.00 | _ | உள்நாட்டு | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பிலான பாடநெறி | 01 | 01 நாள் | _ | _ | உள்நாட்டு | இந்தப்பட்டறைகளில் பங்கேற்ற அனைத்து அதிகாரிகளும் தங்களது பாடப் பகுதிகள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொண்டனர். |
| பாதுகாப்பு உள்ளிட்ட வலையமைப்பு நிருவாகம் தொடர்பில் பயிற்சி | 02 | 06 மாதங்கள் | 72,200.00 | _ | உள்நாட்டு | |
| பொது கொள்முதல் குறித்த ஏல மதிப்பீடு தொடர்பிலான மூன்று நாள் பாடநெறி | 01 | 03 நாட்கள் | 18,000.00 | _ | உள்நாட்டு | |
| கட்டுமானத்துக்கான ஒப்பந்தம் சட்டம் மற்றும் சிக்கலைத் தீர்ப்பதற்கான நடைமுறைப் பாடநெறி | 01 | 01 நாள் | 3,500.00 | _ | உள்நாட்டு | |
| வலையமைப்புடன் கணினி மென்பொருள் | 01 | 06 மாதங்கள் | 34,100.00 | _ | உள்நாட்டு | |
| ஓய்வூதியம் தொடர்பிலான பாடநெறி | 01 | 01 நாள் | 5,000.00 | _ | உள்நாட்டு | |
| அரசாங்கத்தின் சம்பள முறைமை தொடர்பிலான பாடநெறி | 02 | 01 நாள் | _ | _ | உள்நாட்டு | |
| வெளிநாட்டுப் பயிற்சிச் செயற்பாடுகளுக்கான விடுமுறை மற்றும் கொடுப்பனவைப் பெற்றுக் | 02 | 01 நாள் | _ | _ | உள்நாட்டு | |
| அரசாங்கத்தின் கணக்காய்வுச் சட்டம் தொடர்பில் அதிகாரிகளுக்குத் தெளிவுறுத்துதல் | 90 | 02 நாட்கள் | _ | _ | உள்நாட்டு | |
| ஒழுக்காற்று முறைகள் குறித்த இரண்டு நாட்கள் பாடநெறி | 02 | 02 நாட்கள் | 17,000.00 | _ | உள்நாட்டு | |
| **வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் பட்டறை** | | | | | | |
| ITC நில முகாமைத்துவ முறைமை தொடர்பில் தேசிய காணித் திறனை மேம்படுத்தும் மாதிரிப் பயிற்சி | 01 | 05 நாட்கள் | _ | 51,236.38 | வெளிநாட்டு | 1. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து உத்தியோகத்தர்களும் செயற்கைக் கோளர் தானியங்கி, (RS), உலகளாவிய நிறுவல் முறைமை(GPS), பூகோளத் தகவல் முறைமை (GIS), Photometry மற்றும் வரைபடச் செயற்பாடு தொடர்பில் அறிவினைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.<br><br>2. புவியியல் விண்வெளி சார் தரவு மற்றும் |
| காணி நிருவாகத்தின்போது, பொது /தனி கூட்டுச் சேர்தல் தொடர்பில் உலகளாவிய ஆலோசனை | 01 | 03 நாட்கள் | _ | _ | வெளிநாட்டு | |
| அபிவிருத்திக்கான தகவல் தொடர்பு தொடர்பில் சர்வதேசப் பயிற்சி | 01 | 07 நாட்கள் | _ | _ | வெளிநாட்டு | |
| செயல்திறனுக்கான தேசிய நிருவாகப் புள்ளியின் முகாமைத்துவம் மற்றும் பயன்பாடு | 01 | 45 நாட்கள் | _ | 217,124.84 | வெளிநாட்டு | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| FIG பொதுக்கூட்டம் -2019 | 01 | 05 நாட்கள் | _ | 579,217.22 | வெளிநாட்டு | அவற்றில் அனுபவம் தொடர்பில் தொழில்நுட்ப அபிவருத்தி பற்றிய விடயங்களைப்பரிமாறிக் கொள்ளும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிட்டியுள்ளது.<br><br>3. புவியியல் விண்வெளியியலாளர்கள் தொடர்பில் முன்னணியில் உள்ள நபர்களுடன் கருத்துப் பகிர்வுக்குச் சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.<br><br>4. மற்றொரு மறைமுக நன்மை என்னவென்றால், நாடுஅதிக திறன் மேம்பாட்டைப் பெற வாய்ப்புக் கிடைத்துள்ளது. |
| ஒருங்கிணைந்த புவியியல் விண்வெளிசார் தகவல் வார்ப்புருவின் செயல்பாட்டை மேம்படுத்துவது தொடர்பான 4 வது நிபுணர் ஆலோசனை மற்றும் கூட்டம் | 01 | 04 நாட்கள் | _ | 36,218.22 | வெளிநாட்டு | |
| தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் முறைமை தொடர்பிலான முதுகலைப் பட்டப் பாடநெறி | 03 | 10 மாதங்கள் | _ | 396,702.98 | வெளிநாட்டு | |
| தொலையுணர்வு தொடர்பிலான 40 ஆவது ஆசியச் சம்மேளனம் (ACRS- 2019) | 01 | 05 நாட்கள் | _ | 490,213.52 | வெளிநாட்டு | |
| கிம்ஹான பாடசாலை (GNSS -2019) | 01 | 06 நாட்கள் | _ | - | வெளிநாட்டு | |
| 2018 Smart Geospatial Expo | 02 | 03 நாட்கள் | | - | வெளிநாட்டு | |
| உலகளாவிய புவியியல் தகவல் முகாமைத்துவம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் 9 வது அமர்வு | 01 | 03 நாட்கள் | _ | 57,916.36 | வெளிநாட்டு | |
| கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் | 01 | 07 நாட்கள் | _ | 43,584.85 | வெளிநாட்டு | |
| வளர்ந்துவரும் நாடுகளுக்கான கணினி மென்பொருள் / வன்பொருள் / வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் பயிற்சி வகுப்புகள் -2019 | 01 | 30 நாட்கள் | _ | 237,067.73 | வெளிநாட்டு | |
| இலங்கைக்கான உள்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு தொடர்பான பாடநெறி | 01 | 21 நாட்கள் | _ | 179,188.01 | வெளிநாட்டு | |
| தென்கிழக்கு ஆசிய செயற்கைக்கோள் பயன்பாட்டுப் பாடநெறி | 01 | 03 நாட்கள் | _ | 35,936.00 | வெளிநாட்டு | |
| சீன அபிவிருத்தி அனுபவம் மற்றும் அதன் சீர்திருத்தங்கள் மற்றும் இலங்கைக்கான திறந்த கொள்கை குறித்த கருத்தரங்கு | 01 | 30 நாட்கள் | _ | 213,143.00 | வெளிநாட்டு | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அளவு மற்றும் வரைபடம் தொடர்பிலான புதிய பாடநெறி - 2019 | 01 | 11 நாட்கள் | – | – | வெளிநாட்டு | |
| உலகளாவிய புவியியல் தகவல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு | 01 | 03 நாட்கள் | – | – | வெளிநாட்டு | |
| சீன அபிவிருத்தி உதவித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான திறன் மேம்பாடு குறித்த கருத்தரங்கு | 01 | 15 நாட்கள் | – | 111,729.21 | வெளிநாட்டு | |

இந்த பட்டறைகளில் பங்கேற்ற அனைத்து அதிகாரிகளும் தங்களது பாடப்பிரிவு தொடர்பான அறிவைப் பெற்று, அந்தந்த கிளைகளின் மற்ற அதிகாரிகளுடன் பட்டறை தொடர்பான விடயங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

## 7.0 இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றிச் சுருக்கமாக விபரிக்குக. | எதிர்காலத்தில் இணக்கமற்றதனை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது. | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு | இணக்கமானது. | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | பொருத்தமற்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | பொருத்தமற்றது | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | பொருத்தமற்றது | | |
| 1.6 | ஏனைய | பொருத்தமற்றது | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி 445)** | | | |
| 2.1 | பொது நிருவாகச் சுற்றறிக்கை 267/2018 இன்படி நிலையான சொத்துப் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது. | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது. | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது. | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிப்பைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.5 | அனைத்து மாதாந்தச் சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து, பொதுத் திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கமானது. | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது. | | |
| 2.7 | இன்வென்டரி பதிவேட்டினை பராமரித்து, புதுப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை பராமரித்து, புதுப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 2.9 | இழப்புப் பதிவேட்டினைப் பராமரித்து, புதுப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 2.10 | பொறுப்புப் பதிவேட்டைப் (Commitment) பராமரித்து புதுப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 2.11 | அடிக்கட்டைப் புத்தகங்களைப் (GA-N20) பராமரித்து, புதுப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| **03** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன. | இணக்கமானது. | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டமை தொடர்பில் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. | இணக்கமானது. | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டுஅல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் | இணக்கமானது. | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்குச் சுற்றறிக்கை இல. 171/2004 இன்படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயற்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பார்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது. | | |
| **04** | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து, அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் NDB உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| **05** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்துக் கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| **06** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) DMA/1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 6.3 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 6.4 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதிப் பிரமானக் குறிப்பின் | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. | | | |
| 07 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | டி.எம்.ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்குக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. | இணக்கமானது. | | |
| 08 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவச் சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் 07 அத்தியாயத்தின்படி, சொத்துப் பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, | இணக்கமானது. | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கமானது. | | |
| 8.3 | அரச நிதிச் சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது. | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால கட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.5 | நி.பி. 772 இன் படி, கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது. | இணக்கமானது. | | |
| **09** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து, அவற்றை உரிய திகதியில் | இணக்கமானது. | - | - |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு, ஆறு மாதங்களுக்குள் அகற்றப்பட்டது. | இணக்கமானது. | - | - |
| 9.3 | வாகனப் பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்பட்டதுடன், புதுப்பிக்கப்பவும் பட்டது. | சுமார் 95% இணக்கமானது. | - | ஒழுங்காக புதுப்பிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103, 104, 109 மற்றும் 110 இன் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இணக்கமானது. | - | - |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி, வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலிக்கப்பட்டது. | சுமார் 95% இணக்கமானது. | நீண்டகால பழுதுபார்ப்பின் பொருட்டு அனுப்பப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட வாகனங்களில் மேற்கொள்ளப்படவில்லை. | பழுதுபார்ப்புகளுக்குப் பிறகு எரிபொருள் பயன்படுத்தல் தொடர்பில் முறையாக சரிபார்க்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்துப் பதிவுப் புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்பட்டுள்ளது. | இணக்கமானது. | - | - |
| **10** | **வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கிக்கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து, சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது. | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னிருந்த வருடங்களில் செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டன. | பொருத்தமற்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10.3 | வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரி செய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகள் தீர்க்கப்பட்டன. | இணக்கமானது. | | |
| **11** | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடப்பட்டது. | இணக்கமானது. | | |
| 11.2 | நி.பி. 94 (1) இன்படி , ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில்தொடர்ந்திருக்கும். | இணக்கமானது. | | |
| **12** | **அரச அதிகாரிகளின் முற்பணம் 'பி' கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்கியிருந்தது. | இணக்கமானது. | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. | இணக்கமானது. | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையிலுள்ள கடன்கள் அடைக்கப்பட்டன. | இணக்கமற்றது | ஓய்வூதியம், இறந்த, பணியிலிருந்து சென்று விட்ட, மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகளின் பத்து வருடங்களுக்கும் குறைவான கடன் நிலுவை திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளதுடன், மற்றும் பத்து வருடங்களுக்கும் மேலான பற்று நிலுவைத் தீர்க்கப்படவில்லை. | 10 ஆண்டுகளுக்கும் மேலான கடன் நிலுவைத் தொகையை புத்தகத்திலிருந்து நீக்கிவிடுவதன் பொருட்டு (வெட்டிவிடுவதற்காக) ஒப்புதலுக்காக நிதி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இணக்கமானது. | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குப் புதுப்பிக்கப்பட்டு, மற்றும் பராமரிக்கப்பட்டிருந்தது. | இணக்கமானது. | | |
| **14** | **முன் பக்கக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 14.2 | நி.பி. 371 இன் படி, அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 14.3 | நி.பி 371 இன் படி, அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல். | இணக்கமானது. | | |
| 14.4 | திறைசேரிப் புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் | இணக்கமானது. | | |
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானம் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டது. | இணக்கமானது. | | |
| 15.3 | நி.பி. 176 இன் படி, நிலுவைத் தொகை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது. | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகள் பற்றி எழுதப்பட்ட பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன. | இணக்கமானது. | | |
| 16.3 | 20.09. 2017 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 14/2017 இன் படி, அனைத்துஅறிக்கைகளும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது. | | |
| **17** | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒழுங்கு முறையில் பொருத்தமான ஆவணங்கள் பராமரிக்கப்படுவதுடன், இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. | | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக | இணக்கமானது. | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி, ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது. | | |
| **18** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2008 (1) மற்றும் 05/2008 இன் படி, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், அது செயற்படுத்தவும் பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயற்படுத்தவும் அதைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | கண்காணிப்பதற்கான முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | | தேவையான நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| **19** | **மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேரப் பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை | இணக்கமற்றது.. | நிதி ஒதுக்கீடு போதிய அளவு இல்லாததால், அதிகாரிகளுக்கு தேவையான பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடியவில்லை. | 2020 ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்டையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செலாற்றுகை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 ஆவது பந்திக்கு ஏற்ப, மனித வள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரி நியமிக்கப்பட்டு, அவருக் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. | இணக்கமானது. | | |
| **20** | **கணக்காய்வுப் பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளன. | சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் அதிகாரிகளின் கூட்டங்களில் இதுதொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. | | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் சரி செய்வதற்காக ஆவன செய்யப்பட்டுள்ளன. |

## 8.0 முடிவுரை

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்கு திட்டமிட்டபடி இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பணிகளைச் சந்திப்பதோடு மட்டுமல்லாமல், அரசாங்க அபிவிருத்தித்

திட்டங்களுக்கான அவசர கணக்கெடுப்பு மற்றும் வரைபடத் தேவைகளையும், சமூக நலனுக்கும் வெற்றிகரமாகத் திணைக்களம் முடித்தது. இது புதிய தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ளவும், புதிய தொழில்நுட்ப கருவிகளை அறிமுகப்படுத்தவும், கணக்கெடுப்பில் 122% முன்னேற்றத்தை அடையவும் முடிந்தது. இந்த ஆண்டில் இத்தகைய செயல்திறனை அடைய உதவிய அனைத்து மட்டங்களிலும் மற்றும் துறையின் அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்களின் சேவை மிகவும் பாராட்டத்தக்கது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த பணிகளை மேற்கொள்வதில் நிலம் மற்றும் நில மேம்பாட்டு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அனைத்து தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்பையும் நான் பாராட்டுகிறேன்.

ஏ.எல். ஷியாமலீ சித்ரலேக்கா பெரேரா

நில அளவையாளர் நாயகம்

## நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

## 1. மனித வளம் மற்றும் நிருவாகப் பிரிவு

### பணிகள்

திணைக்களத்தின் செயற்பாடுகளை சீரிய முறையில் நடாத்திச் செல்லுதற்குத் தேவையான ஊழியர்களை நியமித்தல், திணைக்கள ஊழியர்களின் தனிப்பட்ட கோப்புகளைப் பேணல், முதலிய மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய திணைக்களத்தின் மற்றும் நிருவாகச் செயற்பாடுகளை மிகச் சிறந்த முறையில் செய்தல்.

### செயலாற்றுகை

மனித வள முகாமைத்துவத்தின் கீழ் பின்வரும் செயல்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

| | செயற்பாடு | செயற்படுத்துவதற் குத் தீர்மானித்திருந்த எண்ணிக்கை | செயற்படுத்திய அளவு |
|---|---|---|---|
| 1 | சேவைக்கான ஆட்சேர்ப்புக்கள் | 441 | 366 |
| 2 | பரீட்சைகளை நடாத்துதல் | 60 | 60 |
| 3 | நேர்முகப் பரீட்சை நடாத்துதல் | 8 | 8 |
| 4 | சேவையினை உறுதிப்படுத்தல் | 542 | 481 |
| 5 | பதவியுயர்வு | 331 | 224 |
| 6 | சம்பள ஏற்றங்களை செலுத்துதல் | 2,602 | 1,678 |
| 7 | ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் | 1 | 1 |
| 8 | சேவையை விட்டு | 30 | 30 |
| 9 | ஓய்வு பெறுதல் | 320 | 320 |
| 10 | இராஜினாமாச் செய்தல் | 22 | 17 |
| 11 | சேவையினை இடைநிறுத்துதல் | 1 | 1 |
| 12 | மீண்டும் சேவையில் அமர்த்துதல் | 9 | 9 |
| 13 | ஒழுக்காற்று விசாரணை | 3 | 3 |
| 14 | வெளிநாட்டு விடுமுறைகளை | 79 | 78 |
| 15 | பிணைகளை ஆரம்பித்தல் | 57 | 57 |
| 16 | பிணை விடுவிப்புக்கள் | 2 | 2 |
| 17 | கடன் அனுமதித்தல்கள் | 29 | 29 |

திணைக்கள வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பில் கீழ்வருமாறு ஆவன செய்யப்பட்டுள்ளன .

| 2019ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்த விபத்துக்கள் பற்றிய கோப்புக்களின் எண்ணிக்கை | 2019ஆம் ஆண்டில் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை | 2019ஆம் ஆண்டில் ஏற்பட்ட விபத்துக்கள் பற்றிய கோப்புக்களின் எண்ணிக்கை | 2019 இல் பூர்த்தி செய்யப்பட்ட விபத்து கோப்புகளின் எண்ணிக்கை | 2019.12.31 வரை மீதமுள்ள விபத்து கோப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 60 | 16 | 76 | 28 | 48 |

ரூபா 1,130,881.39 செலவுசெய்து, நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்குச் தற்காலிகமாக இணைக்கப்பட்ட 7 வாகனங்களுக்கு ரூபா. 50,000 / =மேற்பட்ட பழுதுபார்க்கப்பட்டுள்ளது.

## 2. சட்டத்துறைப் பிரிவு

### பணிகள்

திணைக்களம் தொடர்பான சட்ட விவகாரங்களை மேற்கொள்ளுதல், மாவட்ட நீதிமன்றம் / மேல் நீதிமன்றம் / மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றால் திணைக்களத்தினால் வழக்குகள் தாக்கல் செய்யும்போதும் திணைக்களத்திற்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படும்போதும் சட்டமா அதிபருக்கு உதவுதல் , திணைக்களத்தின் அதிகாரிகள் பணிகள்புரியும்போது முகங்கொடுக்கின்ற சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் ,திணைக்களத்திற்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின்போது நிள அளவையாளர் நாயகம் சார்பாக ஆஜராதல்.

### செயலாற்றுகை

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பில் பின்வருமாறு பங்காற்றப்பட்டுள்ளது.

| நீதிமன்றம் | 2019.01.01 ஆந்திகதியன்று நிலவும் எண்ணிக்கை | 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | 2019 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்த எண்ணிக்கை | 2019.12.31. ஆந் திகதியன்று நிலவும் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 11 | 08 | 05 | 14 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 26 | 04 | 14 | 16 |
| மேல் நீதிமன்றம் | 03 | 03 | - | 06 |
| மாவட்ட நீதிமன்றம் | 22 | 08 | 01 | 29 |
| தொழிலாளர் இழப்பீட்டு நீதிமன்றம் | - | 01 | 01 | - |

அடிப்படை விடயங்களை மேற்கொள்கின்ற கோப்புகள் தொடர்பில் கீழ்வருமாறு பங்காற்றப்பட்டுள்ளது .

| 2019.01.01 ஆந்திகதியன்று நிலவும் எண்ணிக்கை | 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றுள்ள எண்ணிக்கை | 2019 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்த எண்ணிக்கை (பணம் அறவிட்டு அல்லது நீக்குவதற்காகச் சமர்ப்பித்து) | 2019 ஆம் ஆண்டில் சட்ட மா அதிபருக்கு அனுப்பப்பட்டு உள்ள கோப்புக்கள் | 2019.12.31 ஆந்திகதியன்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் கோப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 32 | 10 | 16 | - | 26 |

சட்டமா அதிபருக்கு கீழ்வருமாறு கோப்புக்களை வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

| 2019.01.01 ஆந்திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு உள்ள கோப்புக்கள் | 2019 ஆம் ஆண்டில் முன்னளிக்கப்பட்டு உள்ள கோப்புக்கள் | 2019 ஆம் ஆண்டில் சட்ட மா அதிபரின் ஆலோசனைகளுக்கு ஏற்ப பூர்த்தி செய்யப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை | 2019.12.31 ஆந்திகதியன்று வழக்குத் தொடரும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் கோப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 16 | - | 05 | 11 |

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கீழ்வருமாறு கோப்புக்களை வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

| 2019.01.01 ஆந்திகதியன்று நிலவும் எண்ணிக்கை | 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றுள்ள எண்ணிக்கை | 2019 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்துள்ள எண்ணிக்கை | 2019.12.31 ஆந்திகதியன்று நிலவும் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 09 | 03 | 01 | 11 |

## 3. கணக்குகள் பிரிவு

### பணிகள்

34 கட்டண அலுவலகங்களை உள்ளடக்கிய துறைசார் கணக்கு முறையை பராமரித்தல். திணைக்களத்தின் வருடாந்த தொடர்ச்சியான மற்றும் மூலதன செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் அதை அரசாங்க வரவு செலவுத் திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல். அதற்கேற்ப கிடைக்கின்ற ஒதுக்கீட்டிற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலிருந்து தேவையான நிதிகளைப் பெற்றுக்கொண்டு, அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்குதல் மற்றும் நிதிக் கொள்கைகளின்படி அவற்றை திறம்பட பயன்படுத்துதல்.

திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியினை வரம்புகளுக்குள் நிர்வாகித்தல் மற்றும் பராமரித்தல்.

திணைக்களத்தின் வருமானத்தை தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் மூலம் வசூலிக்க நடவடிக்கை எடுப்பது.

கணக்காய்வு தொடர்பிலான வினாக்களுக்கான பதில்களை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு முறையாக சமர்ப்பித்தல் மற்றும் திணைக்களத்தின் வருடாந்த நிதிநிலை அறிக்கைகளை உரிய திகதியில் தயாரித்தல்.

### செயலாற்றுகை

தயவுசெய்து, முதன்மை அறிக்கையின் பக்கம் 09-17 (ஆண்டின் மொத்த நிதி செயற்றிறன்), பக்கங்கள் 22-25 (இணக்க அறிக்கை) ஐயைப் பார்க்கவும்.

## 4. உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் பிரிவு

### பணிகள்

நில அளவையாளர் நாயகம் அலுவலகம் ,மாகாண நில அவையாளர் அலுவலகம் ,மாவட்ட நில அளவையாளர் அலுவலகம் ,திணைக்களத்தின் கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற பிரதேச நில அளவையாளர அலுவலகங்களில் ,மற்றும் திணைக்களத்தின் பங்களாக்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்த்தல் மற்றும் கட்டுமானம் தொடர்பில் செயற்படுதல்.

அளவிடும் கருவிகள் மற்றும் ஆபரணங்களை சரிசெய்தல் மற்றும் சேவை செய்தல்

அளவிடும் கருவிகளின் அளவுத்திருத்தம் (calibration)

அளவிடும் நிருவாக குறியீடுகளை அளவிடுவதற்கான போல்ட் உற்பத்தி

திணைக்களத்தின் முகாம் பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்தல் , முந்தைய முகாம்களை கழற்றுதலும் நிறுவுதலும்

நில அளவையாளர் நாயகஅலுவலகத்தின் பாதுகாப்பு மற்றும் தூய்மை தொடர்பில் வெளி நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களை வாடகைக்கு எடுப்பதற்கான பொருத்தமான வர்த்தமானி அறிவிப்புகளைத் தயாரித்தல்

திணைக்கள அடையாள அட்டைகளை திணைக்கள ஊழியர்களுக்கு வழங்குதல்.

## செயலாற்றுகை

ரூபா 50,000.00 மேற்பட்ட புதிய கட்டுமானங்கள் மற்றும் பழுது பார்த்தல்.

| | |
|---|---|
| மதவச்சி பிரதேச நில அளவையாளர் அலுவலக கட்டுமானம் | 22,103,000.00 |
| மாதம்பை பிரதேச நில அளவையாளர் அலுவலக கட்டுமானம் | 19,713,000.00 |
| எம்பிலிப்பிட்டிய பிரதேச நில அளவையாளர் அலுவலக கட்டுமானம் | 18,504,000.00 |
| கிரிதல நில அளவையாளர் உத்தியோகபூர்வ இல்லத்தின் கட்டுமானம் | 17,797,000.00 |
| கிரிதல பிரதேச நில அளவையாளர் அலுவலக கட்டுமானம் | 13,129,000.00 |
| கருஞ்சிரிக்காடு இடைநிலை அலுவலகத்தை முறைப்படி அமைத்தல் | 8,185,000.00 |
| நில அளவையாளர் நாயகத்தின் அலுவலக கட்டிடத்தின் வெளிச் சுவர்களுக்கு வர்ணப்பூச்சு பூசுதல் | 5,847,181.15 |
| நில அளவையாளர் நாயகத்தின் அலுவலக இரண்டாவது மாடியின் நிலாமுற்றத்திற்காக கம்பளி வாங்குதல். | 367,200.00 |
| நில அளவையாளர் நாயகத்த்தின அலுவலகத்தில் உள்ளகத் தொலைபேசித் தொகுதியினை பழுதுபார்த்தல். | 226,000.00 |
| நில அளவையாளர் அலுவலகக் கட்டிடத்தின் இரண்டாவது மாடியிலுள்ள நிலாமுற்றத்தை மறுசீரமைத்தல். | 72,200.00 |
| முக்காலி பழுதுபார்ப்புக்காக மரப்பலகைகளை விலைக்கு வாங்குதல். | 65,000.00 |
| முதன்மை சேவைகள் புதிய விடுதியின் ஹாஸ்டலின் படுக்கைகளை | 54,455.00 |

வருடாந்த முழு சேவை பட்டியலின் படி, சேவை தொழில்நுட்ப வல்லுநர்களால் 209 உபகரணங்கள் சேவைத்துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளது .

சேவை பழுது பார்த்தல் காரணமாகக் கிடைக்கின்ற மொத்தம் 239 பாகங்கள் பழுதுபார்க்கப்பட்டுவழங்கப்பட்டுள்ளன .

நில அளவைக் கட்டுப்பாட்டுப் புள்ளிகளுக்காக தேவையான A வகை போல்ட் 1,600 மற்றும் C வகையான போல்ட் 2,750 உற்பத்தி செய்யப்பட்டன.

வெளியாரின் முழு எண்கள் திருத்தியமைக்கப்பட்டு ,ரூபா 34,500/ -இனை திணைக்களம் சம்பாதித்துள்ளது.

## 5. பெறுகைகள் மற்றும் விநியோகப் பிரிவு

### பணிகள்

திணைக்களத்தின் வருடாந்த பொருட்கள் மற்றும் சேவைத் தேவைகளின் கொள்முதல் செயல்முறையைப் பின்பற்றி, கொள்முதல் செய்தல் மற்றும் விநியோகித்தல், அனைத்து களஞ்சியங்களினதும் பேரேடுகளையும் முறையாகப் பராமரித்தல் மற்றும் வருடாந்த களஞ்சியங்களையும் ஆய்வுக்குட்படுத்தி ,மேற்பார்வை செய்து ,கணக்கெடுப்பை கண்காணித்தல் மற்றும் அனுமதி வழங்குதல்.

## செயலாற்றுகை

2019 ஆம் ஆண்டில் 100 ரூபா மில்லியனிலும் கூடிய மூலதனக் கொள்வனவுகளும் 6.8 ரூபா மில்லியனிலும் கூடிய மீண்டெழும் கொள்வனவுகளும், பிம்சவிய கருத்திட்டத்திற்காக 3.1 மில்லியனிலும் கூடிய மீண்டெழும் கொள்வனவுகளும்,ஐக்கிய நாடுகள் சபையின் மானிட குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக (UN - Habitat) கிட்டத்தட்ட 5.1 மில்லியன் ரூபா கொள்வனவுகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகள்,மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகங்கள், மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் பிரதேச நில அளவை அலுவலகங்கள் மற்றும் நாடு பூராகவும் பரவிக் காணப்படும் நில அளவை உத்தியோகத்தர்களினால் பராமரிக்கப்பட்டு வரும் 845 களஞ்சியசாலைப் பேரேடுகளுக்குரிய களஞ்சியக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.

அவற்றிலிருந்து அரச நில அளவையாளர்கள் 643 பேருக்கும் ,சகல மாகாண நில அளவையாளர்கள் அலுவலகங்களுக்கும் ,சகல மாவட்ட நில அளவையாளர் அலுவலகங்களுக்கும் 89 ,பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களுக்கும் மேலும் தியத்தலாவ அளவீடு மற்றும் படவரைபு நிறுவனத்தில் உள்ள களஞ்சிய அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ,சுற்றுலா பங்களா மற்றும் விடுமுறைக் களிப்பிடம் அனைத்திற்கும் ,நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலுள்ள அனைத்துப் பிரிவுகளுக்கும் 2018.12.31 ,திகதிக்கு அனுமதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கோப்புகள் தீர்க்கப்பட்டன.

ஓய்வு பெற்ற மற்றும் சேவையினை இராஜினாமா செய்த 11 உத்தியோகத்தர்களுக்காக நிலையான கணக்குத் தீர்வையும்,பதவியுயர்வு பெற்ற 09 அரச நில அளவையாளர்களுக்காக தற்காலிக கணக்குத் தீர்வையும் வழங்கப்பட்டு உள்ளது.

## 6. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

### பணிகள்

இணையத்தளத் தொடர்பு மற்றும் மின்னஞ்சல் போன்ற மேம்பட்ட தகவல் பரிமாற்ற முறைகளைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு காணி பற்றிய தகவல்களை இணையம் வாயிலாக பெற்றுக்கொள்ளுதல் ,நிருவாக விடயங்களுக்கு உதவிச் சேவையாக மனித வள முகாமைத்துவம் ,தரவுகளைக் களஞ்சியப்படுத்துதல் ,தகவல்களை உடனுக்குடன் முறையாக பெற்றுக்கொள்வதற்காக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்குதல்.

### செயலாற்றுகை

கீழ்வரும் தரவு முறைமை மற்றும் மென்பொருள் 2019 ஆம் வருடத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

### காணித் தகவல்கள் தரவு முறைமையின் தரவுகளை தரவிறக்கம் செய்துகொள்வதற்கான மென்பொருள்

காணி பற்றிய தகவல் தரவு முறைமையில் உள்ள தரவுகளில் தேவையான நிலப் பகுதியொன்று அல்லது பகுதிகள் “Shape File” முறையில் தரவிறக்கம் செய்வதற்கும் புலப்படத்தில் வலயங்களுக்கு ஏற்ற சுற்று எல்லை“ Shape File” வடிவத்தில் தரவிறக்கம் செய்துகொள்வதற்கு அனைத்து மாவட்ட சிரேட்ட நில அளவை அதிகாரிகளுக்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன .இதன் மூலம் பிற்காலத்தில் அளவைகளுடன் தொடர்பான தரவுகளில் நுட்பமான முறையில் பரிசோதிக்க முடியும்.

### இலகு வரைபடமொன்றை உருவாக்குவதற்கு "My Map" மென்பொருள்

“My Map” மூலம் பொதுமக்களுக்கு தங்களது இலகுவான வரைபடமொன்றை வடிவமைத்துக் கொள்வதற்கு வசதி வழங்கப்பட்டுள்ளது .இங்கு அடிப்படைத் தரவாக 1: 50,000 புதிய இட விளக்க வரைபடத்தில் அடிப்படைத் தரவு அடுக்கு உபயோகப்படுத்தப்படுவதுடன் ,பொதுமக்களுக்குத் தேவையான தரவு அடுக்குகளைத் தெரிவு செய்ய முடிவதுடன் தங்களது தரவு“ Shape File” அல்லது “KML” அல்லது “CSV” முறையில் பதிவேற்றி தங்களுக்குத் தேவையான வரைபடத்தை எவ்விதச் செலவுமின்றி வடிவமைத்து அச்சிட முடியும் .மேலதிகமாக தகவல் தொழில்நுட்ப இடஞ்சார்ந்த பகுப்பாய்வு வரைபடமொன்றை வடிவமைப்பதற்கான வசதியும் வழங்கப்பட்டுள்ளது .

இந்தச் சேவையானது திணைக்களத்தின் இணையத்தளத்தில் இணையச் சேவையில்" My Map" மூலம் பெற்றுக்கொள்ள முடியும் .

**மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்திற்காக ஆவண முகாமைத்துவ தரவு முறைமை** (eDOCs)
மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தின் ஆவண முகாமைத்துவத்திற்காக தற்போதைக்கு" ADITS" மென்பொருள் பயன்படுத்தப்படுவதுடன் ஆவணங்கள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகாரிகள் மாவட்ட அலுவலகங்களுக்கு வருகை தர வேண்டியிருக்கும் .இந்தப் புதிய eDOCs தரவு முறைமை இணையத்தின் வாயிலாக பயன்படுத்தப்படுதவனால எந்தவொரு இடத்திலிருந்தும் ஆவணங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் .இதன்மூலம் உயர் நிருவாகத்திற்கும் அதிகாரிகளின் ஆவணப் பயன்படுத்தல் பற்றிய தகவலைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் ,வருடாந்த ஆவணக் கணக்கெடுப்பையும் மிகவும் இலகுவாக மேற்கொள்ள முடியும் .

**எதிர்காலக் கணக்கெடுப்பு கோரிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர்களுக்கான நில விவரங்கள் பட்டியல் தரவு முறைமை** (TL-DMS)கடத்திரல் வரைபடங்களுடன் தொடர்புடைய எதிர்கால அளவைக்காக அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களுக்கு காணி பற்றிய பட்டியலொன்றை வடிவமைத்துள்ளதுடன் ,அதனை இணையத்தின் வாயிலாகப் பயன்படுத்தும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது .

**பிரதேச செயலக எல்லை தொடர்பில் வர்த்தமானி அறிக்கையில் காணப்படும் தரவு முறைமை**
இலங்கையில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் சொந்தமான கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் நிர்வாக எல்லைகள் குறித்த வர்த்தமானி அறிவிப்பு உள்ளிட்ட தரவு முறைமை உருவாக்கப்பட்டுள்ளதுடன், மேலும் அதனைத் திணைக்களத்தின் இணையத்தளம் மூலம் பயன்படுத்த முடியும்.




**அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் நிறைவு செய்துள்ள நிலப் படங்களை களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்த முடியுமான தரவு முறைமை**
அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் நிறைவு செய்துள்ள புலப்படங்களை களஞ்சியப்படுத்துவற்காக தரவுத் தளமொன்றை நிர்மாணித்துள்ளதுடன் ,அதன் மூலம் புலப்படத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றை பதிவேற்றுவதற்கு அதிகாரம்பெற்ற நில அளவையாளர்களுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன .மேலும் தேவையான சந்தர்ப்பங்களில் தன்னால் புலப்படத்தின் பிரதியொன்றைத் தரவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும் .இந்தத் தரவுத்முறைமையைப் பயன்படுத்துவது தொடர்பில் அதிகாரம் பெற்ற நில அளவையார்களுக்கு தெளிவுறுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என நில அளவையாளர் நாயகத்தினால் நில அளவீட்டுச் சபைக்கு அறிவிப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

**நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தின் கணினி வலைமைப்பு முறைமையைப் பயன்படுத்தி கீழ்வரும் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.**

- **"HuRIMS" தரவு முறைமையின் தரவுகளை புதுப்பிக்க இயலுமாதல்.**

மனித வளங்கள் முகாமைத்துவம் தரவுத் தளத்தில் (HuRIMS) உள்ளீடு செய்யப்பட்டுள்ள தரவுகளைப் புதுப்பிப்பதற்காக குறித்த அதிகாரிக்கே அந்தத் தகவல் உள்ளீடு செய்வதற்குரிய வசதி வழங்கப்பட்டுள்ளது .

இதன்மூலம் கீழ்வரும் தரவுகளைப் புதுப்பிக்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன .

- அதிகாரியின் புகைப்படம்
- அடையாள அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி
- பெயர் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில்
- கைபேசி இலக்கம்
- நிரந்தர முகவரி மற்றும் தற்காலிக முகவரி
- மின்னஞ்சல் முகவரி

➢ **நில அளவையாளர் நாயகத்தின் அலுவலக அதிகாரிகள் அலுவல வளாகத்திற்கு வருகின்ற வாகனங்கள் தொடர்பில் தகவல்களை சேகரிப்பதற்கான தரவு முறைமை**

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலக வளாகத்தினுள் பாதுகாப்பை உறுதிப்படுத்துதலுக்காக அலுவலக வளாகத்திற்கு வருகின்ற வாகனங்களைப் பதிவதற்குத் தேவையான தகவல்களை சேகரிப்பதற்காக இந்த மாதிரிப் படிவம் வடிவமைக்கப்பட்டுள்ளது .

➢ **பதிவுசெய்யப்பட்ட அதிகாரம்பெற்ற நில அளவையாளர்களின் நிலப்படங்களை தரவு முறைமைக்குள் உள்ளீடு செய்தல்.**

உள்ளூராட்சி மன்றங்களின் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களின் புலப்படத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளைக் (நில)
மற்றும் தொழில் தரநிலைகள் பிரிவிற்கு இந்தத களஞ்சியப்படுத்துதலுக்காக ஆவண முகாமைத்துவம் தரவு முறைமை உருவாக்கப்பட்டுள்ளது .

➢ **திணைக்கள அடையாள அட்டையை வடிவமைத்தல்**

திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளுக்காகவும் புதிதாக அடையாள அட்டையொன்று வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் ,அதற்குத் தேவையான அடிப்படைத் தகவல்களை மனித வளங்கள் முகாமைத்துவ தரவுத்தளத்திலிருந்து (HuRIMS) பெற்றுக்கொள்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது .இந்த அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கான உபகரணம் மற்றும் கட்டிடப் பிரிவுக்கு நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தின் உள்ளக கணினி வலையமைப்பினூடாக உள்நுழைய முடியும் .“SGO Services (it.survey.lk) ” எனும் இணையத்தளத்தில் Print My ID மூலம் அதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன .




**திணைக்களத்திலிருந்து வழங்கப்படுகின்ற சுற்றுநிரூபங்களை திணைக்களத்தின் வலைத்தளத்திற்கு உள்ளீடு செய்தல்.**

திணைக்களத்திலிருந்து வழங்கப்படுகின்ற சுற்றுநிரூபம் மற்றும் சுற்றுநிரூபக் கடிதங்களை திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு உள்ளீடு செய்வதற்காக முன்னேற்றப் பிரிவு ஆவன செய்துள்ளது .

### "SRIMS" தரவு முறைமையை பிரதேச செயலகங்களுடன் ஒன்றிணைத்தல்.

அளவையியல் வேண்டுகோள் ஒன்றை பிரதேச செயலகத்தினூடாக இணையத்தைப் பயன்படுத்தி சிரேஷ்ட நில அளவை அதிகாரிக்கு முன்வைப்பதற்காக அளவையியல் வேண்டுகோள் முகாமைத்துவ தரவுத்முறைமையை (SRIMS) நவீனமயப்படுத்தி எதிர்வரும் ஆண்டில் செயற்படுத்துவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது .இந்த நவீனமயப்படுத்தல் மூலம் மிகவும் விரைவாக அளவையியல் வேண்டுகோளினை வழங்குவதற்காக சிரேஷ்ட நில அளவையாளர்களுக்கு வசதிகள் செய்துகொடுக்கப்படும் .

- **அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தின் நூலகத்திற்கான தரவு முறைமை**

  தியத்தலவா அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தின் நூலகத்திற்காக தரவுத்தளமொன்றை உருவாக்கியுள்ளது .அதன்மூலம் நூலகத்தில் இருக்கின்ற புத்தகங்கள் பற்றிய தகவல்களை வழங்குதல் மற்றும் கால தாமதமாதல் போன்ற தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு உள்ளது .

- **அலுவலக முகாமைத்துவ தரவுத்தளமொன்றை உருவாக்குதல்**

  காலி மற்றும் பொலன்னறுவ மாவட்ட நில அளவையாளர் அலுவலகங்களுக்காக அலுவலக முகாமைத்துவ தரவுத் தளமொன்று வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதன்மூலம் அலுவலகத்திற்கு வருகின்ற கடிதங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் .

- **களுத்துறை மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தின் கணினி வலையமைப்புத் முறைமையை நவீனமயப்படுத்துதல்**

  களுத்துறை மாவட்ட நில அளவையளார் அலுவலகத்தில் செயற்படாமல் இருந்த கணினி வலையமைப்பினை நவீனமயப்படுத்தி ,கடமை புரிவதன் தேவைக்கு ஏற்ப இணைய வசதியை பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில் வலையமைப்புத் முறைமையை மீளமைக்கப்பட்டுள்ளது .அதற்கு மேலதிகமாக இவ்வாண்டில் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் கீழ்வரும் சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன .

தலைமை அலுவலகத்தின் கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

- தலைமை அலுவலகத்தின் கணினி வலையமைப்பை முகாமைப்படுத்துதலும் நடாத்திச் செல்லுதலும்.
- மனித வள முகாமைத்துவ தரவு முறைமையை புதுப்பித்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஏனைய தரவுத் முறைமைகளை நடாத்திச் செல்லுதலும் முன்னேற்றிச் செல்லுதலும்.
- திணைக்கள இணையத்முறைமையை புதுப்பித்தல் மற்றும் நடாத்திச் செல்லுதல்.
- தலைமை அலுவலகத்தின் தினசரி வருகைப் பதிவு முறையை நடாத்திச் செல்லுதல்.
- திணைக்களத் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றின் பெயர்ப்பட்டியல் தொடர்பில் தகவல் தரவு முறைமை ஒன்றினை நடாத்திச் செல்லுதல்.
- காணி விபரப் பட்டியல் தரவு முறைமை மற்றும் மனித வள முகாமைத்துவத் தரவுத்முறைமையைப் பயன்படுத்துதல் தொடர்பில் பணிகள்யாட் தொகுதியை தெளிவுறுத்துவதற்காக பயிற்சி முகாம்களை நடாத்துதல் .

## உற்பத்தித் திறன் மேம்பாடு

201ஆம் ஆண்டு உற்பத்தித் திறன் மேம்பாட்டு விருதுத் தேர்வில் வடமேல் மாகாண நில அளவையாளர் அலுவலகம் மற்றும் அநுராதபுர மாவட்ட நில அளவையாளர் அலுவலகம் நுண்மைப் பிரிவில் மூன்றாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது .அத்துடன் நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம் தேசிய பிரிவில் உள்ளகத் திணைக்களப் பிரிவில் விசேட விருதினைப் பெற்றுக்கொண்டது .விருது விழாக்கள் 2019.03.26 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்திலும் 2019.12.26 ஆம் திகதி சுஹுருபாய பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது .










### உற்பத்தித்திறன் நிகழ்ச்சியினை நில அளவைத் திணைக்களத்தினுள் தொடர்ந்து செயற்படுத்துதல்

நில அளவைத் திணைக்களத்தின் செயலாற்றுகையை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு வெளிக்கள அலுவலகங்களின் தொடர் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வது மிகத் தேவையானது என்பதனால் ,அதற்காக பணிகள்யாளர்களின் திருப்தியை மேம்படுத்தி ,குழுக்களிடையே நல்லுறவை வளர்த்தெடுத்து ,பொதுமக்களுடன் நட்புடன் கூடிய சிறந்ததொரு சேவையை வழங்கும் நோக்குடன் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக அனைத்துப் பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களுக்குமிடையே 2019 ஆம் ஆண்டு போட்டியொன்று நடாத்தப்பட்டது .அந்தப் போட்டியில் பிரதேச நில அளவையாளர்கள் மற்றும் பூகோள அலுவலகங்கள் 83 பங்குபற்றியது.

## 7. புவிப்பாத்து நில அளவைக்கிளை

### பணிகள்

முழு நாட்டையும் உள்ளடக்கிய செங்குத்து மற்றும் கிடைமட்ட புவிசார் அளவையியலைப் பராமரித்தல் மற்றும் புவிசார் கணக்கெடுப்பு, தரவு வங்கி பராமரிப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பான நடவடிக்கைகள்.

## செயலாற்றுகை

வருடத்திற்குள் செய்யப்பட்ட விசேட அளவை தொடர்பிலான விடயங்கள்

| தொடர் இலக்கம் | விடயங்கள் |
|---|---|
| 1 | ஜீ.பீ.எஸ். நிருவாகப் புள்ளியின் 5,024 அமைத்தல் ம ற்றும் 1,335 கி.மீ. நிலை கோடுகளை நிறுவுதல். |
| 2 | கடலை அண்மித்து மண் அகழ்தல், மண்ணை வெளியில் எடுத்தல் மற்றும் அதிகமதிகம் குவித்தல் மற்றும் பாம்ப் பண்ணுதல். ( கெரவலபிட்டிய - முத்துராஜவெல) திட்டத்திற்காக மணலின் அளவைக் கணக்கிட்டு, குறித்த அறிக்கையைச் சமர்ப்பித்தல். |
| 3 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எண்ணெய்க் குழாய் வழியினூடாகப் பெற்றுத் தருகின்ற GPS தொகுதி எண் GPX களுக்கு மாற்றப்பட்டு அறிக்கையைத் தயாரித்தல். |
| 4 | 1.1 காணித் துண்டுகளை அளக்கும் திட்டம் (காலி - நெலுவ) புள்ளியைக் காணிச் சீர்திருத்த ஆணையாளர் சபைக்காக GPS புள்ளியை கண்காணித்தல். |
| 5 | மல்லாகம் நீதிமன்றத்தின் - வழக்கு இலக்கம் B/232/2019 மற்றும் B/09/2019 ஏற்ப GPS உபகரணங்கள் 03 இனை தரவுக் கண்காணிப்புச் செய்து வரைபடம் மற்றும் புலப்படத்தை பெற்றுக் கொடுத்தல் |
| 6 | கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்ற வழக்கு இலக்கம் (M/UB/ 8480/01/2019) இற்காக GPS உபகரணத்திற்கு ஏற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தல். |
| 7 | பேஸ்லைன் திட்டம் 3 - ஆவது நிலைக்குத் தேவயான ஜீ.பீ.எஸ் .புள்ளியைக் கண்காணித்தல். |
| 8 | யாழ்ப்பாணம் - பலாலி விமான நிலையத்தின் அளத்தல் செயற்பாடுகள் |
| 9 | மன்னார் காற்று வலுத் திட்டத்திற்கு ஏற்ப ,தரவுப் பகுப்பாய்வு செய்தல். |
| 10 | முத்துராஜெவல தொழிற்சாலை முனையத்தின் வீதிக்காக குறியீட்டிற்கான ஆய்வு. |
| 11 | கொழும்புத் துறைமுக நகரத்திற்காக நிருவாகப் புள்ளியை நிறுவுதல். |
| 12 | கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலைய வளாகத்திற்காக பூகோளமயமாக்கல் வரைபடத்தைத் தயார் செய்தல். |
| 13 | மெரகஹகந்த திட்டத்திற்கு ஏற்ப நிருவாகப் புள்ளைய நிறுவுதல். |
| 14 | பேஸ்லைன் வீதியை விசாலிப்பதற்காக 3 ஆவது நிலை - திட்டத்தின் மூன்றாவது நிலையை பெற்றுக் கொள்ளுதல் . |
| 15 | மாகாண வீதி அபிவிருத்தித் திட்டத்திற்குத் தேவையான நிருவாகப் புள்ளிகளை நிறுவுதல். |
| 16 | பண்டாரவெல பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்த விமான லையத்திற்கு ஏதுவான பிரதேசத்தின் அளத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் |
| 17 | நீர்ப்பாசனத் திணைக்களத்திற்காக மொனராகல மாவட்டக் குளங்களின் அபிவிருத்திக்குத் தேவையான கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல். |
| 18 | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கலவான - தெனியாய வீதியின் அபிவிருத்திக்குத் தேவையான கட்டுப்பாட்டுப் புள்ளியை நிறுவுதல். |

ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட சேவைகள் வழங்கல்

| தொடர் இலக்கம் | விடயங்கள் |
|---|---|
| 1 | அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு புவிப்பாத்து பாலன புள்ளிகள் மற்றும் பீடக்குறிகளின் விபரங்களை வழங்குதல். |
| 2 | SLCORSnet தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அளவை விடயங்களை மேற்கொள்வதற்குத் தேவையான சேவைகள், அரச நிறுவனங்களில் பயன்படுத்தும் 34 பேருக்கு மற்றும் அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் போன்ற தனியார் பிரிவைச் சேர்ந்த 12 பேருக்கு வழங்குதல். (இதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா. 419,880.00 ஆகும்.) |
| 3 | புவிப்பாத்து பாலன புள்ளிகள் பீடக்குறிகளின் தரவு முறைமையை மேம்படுத்துதல் |

| | |
|---|---|
| 4 | SLCORSnet மற்றும் RTK தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ,அளத்தல் தொடர்பிலான விடங்களை மேற்கொள்வதற்காக திணைக்களத்தின் அதிகாரிகள் ,அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு பயிற்சிகளை வழங்குதல் மற்றும் பயிற்சி முகாம்களை நடாத்துதல். |

## 8. விஷேட நில அளவைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு

### பணிகள்

புதிய தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி விசேட அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அவசர நில அளவைத் தேவைப்பாடுகளை சிறப்பாக வழங்குதல் ,நிலத் தகவல்கள் தொடர்பில் சிக்கலான பிரச்சினைகளின் போது சுமுகமான முறையில் அவற்றைத் தீர்த்து ,மிகச் சிறப்பான முறையில் நிலத் தகவல்களை குறித்த பிரிவினருக்கு வழங்குதல் , முழு நாடும் முகங்கொடுக்கும் அவசர அனர்த்தங்கள் நிகழும்போது பொதுமக்களுக்குத் தேவையான நிவாரணம் மற்றும் செயல்திறனை வழங்குதல் போன்ற தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கான திணைக்களத்தின் சார்பாக முன்னோடியான பங்களிப்பினை வழங்குதல்.

### செயலாற்றுகை

1. நவீன தொழில்நுட்ப முறைமையைப் பயன்படுத்தி Calibration for Master Landing Compass, Calibration for Medium Landing Compass மற்றும் Jig Calibration முதலிய திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளின் மூலம் செயற்படுத்துவதற்குக் இயலாத விசேட அளத்தல் செயற்பாடுகளை இலங்கை விமானப்படைக்கு நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம்.
2. காலநிலை தணிப்பு திட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் வெள்ளத்தை கட்டுப்படுத்தவும், களனி ஆற்றின் குறுக்கே ஏழு பாலங்களை நிறுவுவதற்காக சராசரி கடல் மட்டத்தை நிறுவுதல்.
3. திருகோணமலை தொல்பொருள் ஆய்வுப் பிரதேசத்தில் அளத்தல் செயற்பாடுகளில் ஈடுபடுதல் ,அசிரி மலை , பம்பரகல ,மிகிந்து லென ,சப்த நாக ,தெபர கல ,சங்கமலை ,பாகிய பப்பத ,ஆனை ஏறிய மலை
4. சிதுல்பவ்வ மற்று மிகிந்தலை புனித பூமிகளுக்குச் சொந்தமான இடங்களை அளந்து ,எல்லைகளைச் சீராக்குதல்
5. கொச்சிக்கடை புனித அந்தோனி தேவாலயத்தில் குண்டு வெடித்தல் தொடர்பில் அளத்தல்
6. கடான கட்டுவாபிட்டி தேவாலயத்தில் குண்டு வெடித்தல் தொடர்பில் அளத்தல்.
7. கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்திற்கான நிரந்தர அட்சரேகை எல்லையை அடையாளப்படுத்துதல்
8. அனலை தீவு, நைனா தீவு, கச்ச தீவுகளை அளத்தல் நடவடிக்கை.
9. ஐந்துர கல் வேலைத்தளத்தில் இதுவரை உடைக்கப்பட்ட கற்களின் பௌதீக அளவினைக் கணித்தல்.
10. முல்லைத்தீவு கடற்படுக்கையில் வெட்டவளை தொல்பொருள் பகுதியின் நிலப்படத்தைத் தயாரித்தல்.
11. கிரம, வராப்பிட்டிய குளத்திற்கு பொறியியல் அளவையை மேற்கொள்ளல்.
12. தொலுவ - வரியகலவத்தை மற்றும் ஓபல்கல வனப்பாதுகாப்பகங்களை அளத்தல்.
13. வத்தளை - மாபோலை நகர சபையின் காணியை அளத்தல்.
14. பாடசாலைத் தரவு முறைமையைத் தயாரித்தல்.
15. ஹக்கல கடும் இயற்கைக் காப்பகத்திற்காக சட்ட ரீதியான நிலப்படமொன்றை தயாரித்தல்.
16. நன்கொடைப் பத்திரங்களை வழங்குவதற்காக எல்பிட்டிய மற்றும் நெலுவ பிரதேச செயலகங்களில் காணிகளை அளத்தல்.
17. முத்துராஜவெல ஈர வலயத்தின் நிலப்படத்தைத் தயாரித்தல்.
18. கட்டுநாயக்க விமான நிலையப் பிரதேசத்தை அளந்து, நிலப்படத்தைத் தயாரித்தல்.
19. மாளிகாவத்தை புகையிரத அளவையினை மீண்டும் மதிப்பிடுதல்.
20. புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற களுகங்கை மொரகஹ உத்தேசத் திட்டத்தின் அளத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
21. நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள தலாவ சூழலியல் பூங்காவிகான அளத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
22. IWS நிறுவனத்தினால் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள உலங்கு வானூர்தி முற்றத்திளை அளத்தலும் வரைபடத்தை உருவாக்குதலும்.
23. பத்தரமுல்ல காணியொன்றின் அமைவிடத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் கொட்டபொல நில அளவையாளர் அறிக்கையைத் தயாரித்தல்.

24. உடவத்த காட்டுப்பகுதியில் உள்ள திலங்கா ஹோட்டலுக்குச் சொந்தமான காணியை அளத்தல்
25. காலநிலை மாற்றங்களை நிர்வாகிக்கும் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் மனுக்களின் அடிப்படையில் அளத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
26. தரை மற்றும் கடற் பிரதேசங்களில் போதைப்பொருள்களைச் சுற்றி வளைப்பு, சட்டவிரோத குடியேற்றம் மற்றும் எல்லை மீறல்கள் ஆகியவற்றில் தொடர்புடைய பாதுகாப்பு மற்றும் சட்டப் பிரிவுகள் தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான துல்லியமான தரை தகவல் மற்றும் இடஞ்சார்ந்த தரவு பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
27. கொழும்பு நகர சபை எல்லையை நிர்ணயித்தல்.

## 9. புவியியல் தகவல்கள் பிரிவு

### 9.1 வான்முறை பட அளவைகள் பிரிவு

**பணிகள்**

வரைபடமாக்கல் மற்றும் அபிவிருத் திட்டங்கள் என்பவற்றிற்குத் தேவையான தரவுகளை விமான ஒளிப்படங்களைப் பயன்படுத்திப்
பெற்றுக்கொள்ளல் மற்றும் LiDAR கருத்திட்டப் பிரதேசத்தில் 10k LiDAR தரவுச் செயன்முறையினை இற்றைப்படுத்தல்.

**செயலாற்றுகை**

2019 ஆம் ஆண்டுக்குள் செயற்படுத்திய செயற்பாடுகள்

| விடயம் | முன்னேற்றம் |
|---|---|
| LiDAR புள்ளிகளின் இனைத் தயாரிப்பதன் ஊடாக DEM, சமவுயரக்கோட்டு வரைபடங்கள் மற்றும் பகுதியளவிலான ஓர்தோ புகைப்படங்களைத் தயாரித்தல். | 994.23 சதுர கி.மி. (249 million DEM Points) |
| 1:10,000 புவியியல் பண்புகளை இற்றைப்படுத்துவதற்காக 2D தரவுகளைப் | 4000 சதுர கி.மி. |
| விமான ஒளிப்படங்களை மீண்டும் அச்சுப்பதிப்பு செய்தல். (கோரிக்கைக்கு அமைய) | 293 புகைப்படங்கள்/பத்திரங்கள் |
| விமானங்களின் பிரயாண வழிச் சுட்டிகளின் வரைபடத்தின் புள்ளிவிபரவியல் | 49 பத்திரங்கள் |
| வருடுதல் (Scaning) - வன் பிரதி/மென் பிரதி தட்டுகள் | 3007 தட்டுகள் |

### 9.2 தொலை நிலைப் பிடிப்புப் பிரிவு

**பணிகள்**

- இலங்கை முழுவதையும் உள்ளடக்குவதற்கு, உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக் கோள் படங்களைப் பயன்படுத்தி 1: 50,000 இட விளக்கவியல் படங்களை டிஜிட்டல் தரவு முறைமையை தரவேற்றுதல் மற்றும் தரவேற்றிய தரவினை 1: 50,000 வரைபடத்திற்காக வழங்குதல்.

- உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக் கோள் படங்களைப் பயன்படுத்தி ,1:10,000 இட விளக்கவியல் டிஜிட்டல் தரவு முறைமையை தரவேற்றுதல் மற்றும் தரவேற்றிய தரவுகளை மேலோங்கச் செய்தலுக்காக புவியியல் தகவல் முறைமைப் பிரிவுக்கு வழங்குதல்.

**செயலாற்றுகை**

உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக் கோள் படங்களைப் பயன்படுத்தி ,இலங்கையின் வடக்கு மாகாணத்தின் 15366.4 சதுர கிலோமீற்றர் கொண்ட பிரதேசம் ஒன்றை உள்ளடக்கி 1:50,000 படத்தொகுதியில் 24 படங்களை தரவேற்றுதல் இந்த ஆண்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது .
உயர் தெளிவுத் திறன் கொண்ட செயற்கைக் கோள் படங்களைப் பயன்படுத்தி 3499 சதுர கிலோமீற்றர் நிலப் பகுதியொன்றை உள்ளடக்கி ,1:10,000 வரைபடத் தொகுதியில் 101 தாள்கள் தரவேற்றல் இவ்வாண்டுக்குள் நிறைவு செய்யப்பட்டுள்ளது .

## 9.3 பூ கோள முறைமைப் பிரிவு

### பணிகள்

தேசிய தேவைகளையும், பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்வதற்காக, புவியியல் தகவல் முறைமை ஒன்றினை உருவாக்குதல், தரவுகளை சேசகரித்தல், பராமரித்தல், புதுப்பித்தல் மற்றும் அதனைப் பரப்புதல்.

### செயலாற்றுகை

சென்ற வருடங்களில் இடைநிலை  செயற்பாடு வரை மேம்படுத்தப்பட்டிருந்த கொழும்பு ,கம்பஹா மற்றும் களுத்துறை முதலிய மாவட்டங்களில்  பகுதிகளாகவும் கேகாலை மாவட்டம் முழுமையாக உள்ளடக்கப்படக்கூடிய முறையில் 4,280 சதுர கிலோமீற்றர்  பிரதேசமொன்றும் 2019 ,ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கண்டி ,நுவரெலியா மற்றும் பதுளை முதலிய மாவட்டங்களின் பகுதிகள் உள்ளடக்கப்படக் கூடிய முறையில் 2,120 சதுர கிலோமீற்றர் பிரதேசமொன்றுமாக மொத்தம் 6400 சதுர கிலோ மீற்றர் அளவு 1:10 000 அளவில் தரவு முறைமை மேம்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது .

அநுராதபுரம் ,திருகோணமலை ,பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு முதலிய மாவட்டங்களில் பகுதிகளாக உள்ளடக்கக்கூடிய வண்ணம் 1,600 சதுர கிலோ மீற்றர் அளவுக்கு  1:10 000 பரிமாணத்தில் தரவு முறைமை திணைக்களத்தில் இருக்கின்ற ஏனைய தரவு முறைமை மற்றும் ஒப்பீடு செய்து ,மேம்படுத்தல் வழிகள் தவிர, பிற மேம்படுத்தல் வழிகள்  நிறைவு செய்யப்பட்டுள்ளன .

தேர்தல்கள் ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கு ஏற்ப 2019 ,ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு ஏற்ப வாக்களிப்பு நிலையங்களுக்கு தரவு முறைகள் ஒழுங்கமைத்துக் கொடுக்கப்பட்டன.

அரச மருத்துவமனைகள் ,தனியார் மருத்துவமனைகள் மற்றும் ஆயுர்வேத மருத்துவனைகள் என்பன உள்ளடங்கக் கூடிய முறையில் தகவல் முறைமை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது .

இணையம் வழியாக பரீட்சிக்க முடியுமான முறையில் இலங்கையில் விடுவிக்கப்பட்டுள்ள கிராம சேவகர் பிரிவுகள் வரைபடம் மேம்படுத்தப்பட்டுள்ளது .

இலங்கை உள்ளடங்கக் கூடிய முறையில் 1:50,000 அளவில் பொருத்துதல்கள் அற்ற (Seamless) தரவு முறைமை உருவாக்கப்பட்டுள்ளது .

## 9.4 தேசிய எண்முறைத் தரவுகள் உட்கட்டமைப்பு

### பணிகள்

இடஞ்சார்ந்த தரவு மற்றும் தகவல்களைப் பயன்படுத்துவதற்கும் பகிர்வதற்கும் ஒரு முறையான தேசிய திட்டத்தை உருவாக்குவதற்காக இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் செயற்படுத்துகின்ற வியூகத்தின் முக்கிய பங்குதாரராக அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் கொள்கை வகுப்பதில் தேவையான உதவிகளை வழங்குதல் .தேசிய இடஞ்சார்ந்த தரவு உள்கட்டமைப்பு திட்டத்தின் முக்கிய பங்குதாரராக கொள்கை வகுப்பதில் தொழில்நுட்ப உதவிகளையும் உதவிகளையும் வழங்குதல்.

### செயலாற்றுகை

இலங்கையின் தேசிய இடஞ்சார்ந்த தகவல் தொழில்நுட்பத் தரவு உள்கட்டமைப்பைத் தயாரிப்பதில் முன்மொழியப்பட்ட தொழில்நுட்ப மற்றும் கொள்கைக் கருத்தாய்வுகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திணைக்களம் தயாரிக்கின்ற 50k மற்றும் 10k பூகோளப் பண்புகளுடனான தகவல் தொழில்நுட்பத் தரவுகளின் பண்புகளை நிர்ணயிப்பதற்குத் தேவையான தரவுகளின் இடத்துல்லிய தன்மையைப் பரிசீலிப்பதற்காக முறையொன்றை தயாரித்தல் மற்றும் குறித்த மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

## 10. வரைபடமாக்கல்

### பணிகள்

திணைக்களத்தின் பணிகளில் முக்கிய பிரிவான அபிவிருத்தி விடயங்களுக்குத் தேவையான இட விளக்கப்படம் மற்றும் பல்வேறு விடயங்களின் கீழ் கருப் படத்தை உருவாக்குதல், நுகர்வோரின் வேண்டுகோளின்படியும் வரைபடங்களை உருவாக்குதல் ,வரை படங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து உற்பத்திகளையும் அச்சிடுதல் மற்றும் எண்தரவு முறையில் கொள்வனவு செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துதல்.

### செயலாற்றுகை

#### புவியியல் பண்பு ரீதியான வரைபடங்களை வரையும் அலகின் ஊடாக பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- 1:50,000 வரைபடங்கள் கோவையின் இரண்டாவது இரண்டாவது பதிப்பின் கீழ் 9 வரைபடங்களைத் தயாரித்து அச்சுப் பதிப்பிற்காக அனுப்பப்பட்டு உள்ளது. அவையாவன-

| | | |
|---|---|---|
| 60 - அத்தனகல்ல | 61 - கம்பொல | 62 - ஹங்குரன்கெத்த |
| 67 - அவிஸ்ஸாவெல்ல | 68 - நுவரெலியா | 69 - பதுளை |
| 74 - இரத்தினபுரி | 75 - பலங்கொட | 76 - ஹபுத்தளை |

- 1:50,000 இட விளக்கப்படத்தின் இரண்டாவது பதிப்பின் கீழ் 15 வரைடபடங்களின் மீளாய்வுகள் நிறைவு பெற்றுள்ளன.
- நுகர்வோரின் தேவைப்பாட்டிற்கு அமைய 1:10,000 அளவான 38 வரைபடங்கள் பூர்த்தி செய்து வழங்கப்பட்டு உள்ளன.

#### தொனிப்பொருள் வரைபடங்கள் பிரிவின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- கருப்பொருட் படங்கள் பிரிவு மூலம் 2019 ஆண்டின் நகர வரைபடம் 01 உம் ,மாவட்ட வரைபடம் - இரண்டாவது பதிப்பின் 09 வரைபடங்களும் மாகாண வரைபடம் - இரண்டாவது பதிப்பின் 02 உம் நிறைவு செய்யப்பட்டுள்ளன .
- பாடசாலை வரைபடத் தொடரின் இரண்டாவது பதிப்பில் 04 வரைபடங்களும், பிற கருப்பொருள் படங்களின் கீழ் 07 வரைபடங்களும் மற்றும் திணைக்களத்தின் முன் சுவரல் காட்சிப்படுத்தப்பட்டு ஒரு வரைபடமும் (Wall Map) நிறைவு செய்யப்பட்டுள்ளன.

#### புவியியல் பண்புரீதியான வரைபடங்ளைத் தயாரிக்கும் பிரிவின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- 1:10,000 அளவுத் திட்டத்தில் நுகர்வோர் படங்கள் 80 உம் இந்தப் பிரிவின் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளது . மேலதிகமாக குறியீட்டு வரைபடங்கள் 62 உம் நேர்கோட்டு வரைபடங்கள் 86 உம் நிறைவு செய்ப்பட்டுள்ளன.

#### விஷேட வரைபடங்கள் பிரிவின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- நுகர்வோரின் கோரிக்கைக்கு அமைய தயாரிக்கப்பட்ட வரைபடங்களை விற்பனை செய்வதன் ஊடாக குறிப்பிடத்தக்க அளவான வருமானம் ஒன்றினைத் திணைக்களம் ஈட்டிக்கொள்வதுடன் 2018 ஆம் ஆண்டில் மேற்படி வரைபடங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 466 ஆகும்.

2019 **ஆம் ஆண்டில் வரைபடங்கள் தயாரிப்பின் செயலாற்றுகை கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது**.

| பிரிவு | அலகு | வருடாந்த இலக்கு | பெற்றுக்கொள்ளப் பட்ட செயலாற்றுகை | இலக்கிற்கு ஏற்ப சதவீதம் % |
|---|---|---|---|---|
| பிரதேசவியல் வரைபடங்கள் (வரைதல்) | வரைபடங்களின் எண்ணிக்கை | 135 | 150 | 111.11% |
| விஷேட வரைபடங்கள் | | 485 | 466 | 96% |
| சுவாத்திய வரைபடங்கள் | | 30 | 25 | 83.3% |
| பிரதேசவியல் வரைபடங்கள் (தயாரிப்பு) | | 218 | 228 | 104.58% |

ஒவ்வொவ்வொரு பிரிவுகளினதும் செயலாற்றுகைகளின் சதவீதங்கள் கீழே வரைபடத்தில் காட்டப்பட்டு உள்ளது.




## வரைபடங்களை விற்றல்

நாரஹேன்பிட தலைமை அலுவலகத்தில் நுகர்வோர் சேவை நிலையத்தின் மூலம் வரைபடங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து அச்சிடப்பட்ட மற்றும் டிஜிட்டல் முறையில் விற்பனை செய்யப்படுவதுடன் ,தியத்தலாவ அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தின் மூலமும் அனைத்து மாவட்ட அளவையாளர் அலுவலகங்களிலிருந்தும் அனைத்து அச்சிட்ட வரைபடங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளன .

வரைபடங்கள் விநியோகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அரச பாதுதகாப்புத் திணைக்களத்தின் மட்டுப்படுத்தலின் கீழ் என்றாலும் ,இந்த ஆண்டின் அச்சிடப்பட்ட வரைபடங்கள் ,டிஜிட்டல் வரைபடங்கள் மற்றும் டிஜிட்டல் தரவுகள் விற்பனை மூலம் மற்றும் அரச புனைவுரிமைத் தொகையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் கீழ்வரும் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது .

நில அளவையாளர் நாயக அலுவலகம்

அச்சு வரைபடங்களை விற்பனை செய்தல் = ரூபா. 4,914,410.00
நுகர்வோரின் தேவைப்பாட்டிற்காக விஷேட வரைபடங்களை விற்பனை செய்தல் = ரூபா. 2,704,260.00
புள்ளிவிபரவியல் ரீதியான தரவுகளின் வருமானங்கள் = ரூபா. 9,829,211.15
அரசிற்குரிய தொகையினை அறிவிடுதல்கள் = ரூபா. 540,500.00

நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம் மற்றும் மாவட்ட நில அளவை அலுவலகங்கள்
அச்சு வரைபடங்களை விற்பனைசெய்தல் = ரூபா. 1,880,801.00
வரைபடங்கள் ,டிஜிட்டல் வரைபடங்கள் மற்றும் டிஜிட்ல் தரவின் மூலம் முழு இலாபம் = ரூபா. 19, 869,182.15

பண்டாரநாயக்கா சர்வதேச நினைவுக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியின் போது வரைபடங்கள் விற்பனை செய்ததன் மூலம் ரூபா .594,646.00 இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

## வரைபடமாக்கல் பிரிவினூடாக மேற்கொள்ளப்பட்ட விஷேட பணிகள்

1. வரைபடமாக்கலுக்கான கையேடு (Mapping Manual) ஒழுங்கமைக்கப்பட்டு அச்சிடப்பட்டது .

2. திட்ட வரைபடங்களின் வர்ண அச்சுப்பதிப்பு அலகின் ஊடாக மேற்கொள்ளப்படும் பணிகளான Layout தயாரித்தல், EDM புத்தகங்களை அச்சுப்பதிப்பு செய்தல் மற்றும் ஏனைய திணைக்களத் தேவைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்குரிய சகலவையும் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது.

3. புத்தகம் கட்டுதல் பிரிவின் மூலம் நடைபெறுகின்ற செயற்பாடுகளில் EDM புத்தகம் கட்டுதல் மிக முக்கிய செயற்பாடாக உள்ளதுடன் ,வேலைச்சிட்டிற்கேற்ப அனைத்து வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன .

2019ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகளில் விசேட செயற்பாடுகளில் கீழ்வரும் புத்தகங்கள் மற்றும் பேரேடுகள் கட்டுதல் உள்ளடக்கப்பட்டுள்ளன .

| | | | |
|---|---|---|---|
| வெளிக்களப் புத்தகங்கள் | - | 9,370 | (ஈடீஎம், வெளிக்களப் புத்தகங்கள், மட்டம் புத்தகங்கள்) |
| புத்தகம் கட்டுதல் | - | 2,586 | |
| வரைபடங்கள் ஒட்டுதல் | - | 125 | |
| களப் புத்தகம்) பயிற்சி | - | 500 | (தியதலாவ அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்திற்காக) |
| கோப்புக்களின் மேலுறைகளைத் தயாரித்தல் | - | 150 | |

4. லித்தோ பிரிவில் அச்சிடும் நடவடிக்கைகளின் போது ,132.6% பெறுபேறு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் ,லித்தோ அச்சிடல் அச்சிடும் நடவடிக்கைகளின் போது ,நிறங்களில் நிறங்களை பிரித்தெடுத்தல் ஒரு நிறத்திற்கான பிரித்தெடுத்தல் திணைக்களத்தின் மூலம் பங்களிப்புச் செய்யப்பட்டதனால் மேலதிகமாக பண மீதி கிடைக்கப்பெற்றது . இந்த ஆண்டில் கீழ்வரும் அளவுகளில் வரைபடங்கள் ,புத்தகங்கள் மற்று மாதிரிப் படிவங்கள் அச்சிட ஆவன செய்யப்பட்டன .

| பிரிவு | தாள்கள் அல்லது வரைபடங்களின் பிரிவு எண்ணிக்கை | அச்சிடப்பட்ட அளவு |
|---|---|---|
| • அளவையியல் சஞ்சிகை | | 1,100 |
| • 50K (2 ஆவது பதிப்பு ) வரைபடங்கள் கோவைத் | 23 | 16,300 |
| • மாவட்ட வரைபடங்கள் | 12 | 6,000 |
| • கருப்பொருட் படங்கள் | 10 | 10,650 |
| • இராணுவத்தினருக்காக க்ரிட் தாள்கள் | 06 | 600 |
| • 50K வரைபடப் பகுதிகள் | | 19,250 |
| • நேர்கோட்டு வரைபடங்கள் | | 20,000 |
| • காற்றாள்‘ காலே பத்ர’ | | 29,000 |
| • காணி தொடர்பான அட்டவணை | | 67,000 |
| • புலப்படத் தாள் | | 4,500 |
| • கடிதத் தலைப்புக்கள் | | 26,000 |
| • EDM பக்கங்கள் | | 43,200 |
| • திணைக்களப் படிவம் | 18 | 81,100 |
| • புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 08 | 2,785 |
| • ஏனையவை | | 3,255 |

## 11. புவியியல் பெயரீட்டுப் பிரிவு

### பணிகள்

இலங்கை மக்களின் கலாச்சார உரிமையுடன் பின்னிப் பிணைந்துள்ள தேசிய ஒற்றுமைக்கு துணைபுரியும் சரியானதும், உறுதியானதுமான புவியியல் பெயர்கள் மற்றும் தரவுகள் கட்டமைப்பு ஒன்றினைத் தரப்படுத்தலின் ஊடாக அறிமுகம் செய்தல்.

### செயலாற்றுகை

புவியியல் பெயர்கள் தரப்படுத்தல் சபையாக 2019 ஆம் ஆண்டிற்காக அமைச்சரவை மூலம் நியமிக்கப்பட்டுள்ள தேசிய ரீதியிலான குழு ,குறித்த ஆண்டில் 05 கூட்டங்களை நடாத்தியுள்ளது .
குறித்த சபையின் மூலம் ஒழுங்கு செய்யபட்டுள்ள புவியியல் பெயர் தரப்படுத்தலில் அடிப்படையான மற்றும் கொள்கைச் செயற்பாடுகளுக்கு ஏற்ப 2019 ஆம் ஆண்டில் கீழ்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன .

- புவியியல் பெயர்கள் வலைப்பக்கத்தில் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை வெளியிடுவதை 2019 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- சாலைகள், நீர்வழிகள் மற்றும் இடப் பெயர்களில் திருத்தங்கள் மற்றும் புதிய உள்ளீடுகளுக்கான புவியியல் பெயர்கள் தரவு முறைமைகளுக்கான வலைத்தளம் (www.geonames.gov.lk) மூலம் பொதுமக்களின் 563 கருத்துக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன .அவற்றில் 454 இனை பரிசோதித்து நிறைவு பெற்றுள்ளன .
- புவியியல் பெயர்கள் வலைப்பக்கத்திற்கு தரவேற்றுதல் மற்றும் மாற்றங்கள் நிகழ்த்துதலை 331 பிரதேச செயலகப் பிரிவுகள் நிறைவு செய்துள்ளன .
- புவியியல் பெயர்கள் தரப்படுத்தல் சபையின் பங்கினை முறைமைப்படுத்துவதற்காகத் தேவையான சட்ட ரீதியிலான சட்டகத்தை அமைப்பதற்கான கருத்துக்களுடன் கூடிய அமைச்சரவைப் பத்திரமானது , அமைச்சரவையின் அனுமதிக்காக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.
- தரப்படுத்தப்பட்டுள்ள புவியியல் பெயரை அரச நிறுவனங்களில் உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்துவது தொடர்பில் அரச நிருவாக சுற்றுநிரூபம் ஒன்றை வழங்குவதற்காக சுற்றறிக்கையின் வரைவு தயாரிக்கப்பட்டு ,காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது .

## 12. ஆவண முகாமைத்துவம் மற்றும் தொழில்சார் தரங்கள் பிரிவு

### பணிகள்

இந்தக் கிளையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அதிகமான பழைய நிலப்படங்களின் குறி வரைபடங்கள் பொதுமக்களின் வேண்டுகோளின் பேரில் வழங்குதல், இந்தக் கிளையில் பட்டியலிடப்படுகின்ற, துறையில் மேற்கொள்ளப்படுகின்ற அளத்தல்களின் பின்னர் தயாரிக்கப்படுகின்ற அனைத்து சட்ட ரீதியான நிலப்படங்களினதும் சான்றளிக்கப்பட்ட பிரதிகளும் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற அளத்தல் நடவடிக்கைகள் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுதல், காணிகளுக்கான பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான இறுதி கிராம நிலப்படத்தைத் தயாரித்தல்.

### செயலாற்றுகை

1. **உரித்துக்கள் தொடர்பான திட்ட வரைபடங்களின் பிரதிகளை வழங்குதல்**

உரித்துக்கள் தொடர்பான திட்ட வரைபடங்கள் மற்றும் ஏனைய திட்ட வரைபடங்கள் என்பன வழங்கப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை1,983

மேற்படி பிரதிகள் வழங்கப்பட்டதனால் ரூ. 1,633,380.00 தொகை ஒன்று ஈட்டப்பட்டு உள்ளது.

**2. மாவட்ட நில அளவை அலுவலகத்தால் வழங்கப்பட்ட கோட்டு வரைபின் விமர்சனத்தை ஆவணக் காப்பகத்தில் உள்ள பதிவேட்டில் பதிந்து, குறித்த காணி தொடர்பான விவரங்களின் பட்டியலைப் புதுப்பித்தல்.**

| | | |
|---|---|---|
| தீர்வு வழங்கப்பட்ட வரைபடங்கள் (S) | - | 129 |
| முழுமையாக கைம்மாற்றப்பட்ட காணிகளின் தகவல்கள் மற்றும் தீர்வு வழங்கப்பட்ட வரைபடக் குறிப்புகள் (O மற்றும் V) | - | 1,130 |
| குத்தகை வரைபடங்கள் (L) | - | 431 |

3. **நீதிமன்ற ஆணைக்குழுவின் அளத்தல் சார் இணைப்புக்கள்.**

| | | |
|---|---|---|
| கடந்த ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட நீதிமன்ற ஆணைக்குழு கட்டளை அளவைகளின் எண்ணிக்கை | - | 490 |
| ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்ற நீதிமன்ற ஆணைக்குழு கட்டளை அளவைகளின் எண்ணிக்கை | - | 477 |
| வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்ட எண்ணிக்கை | - | 674 |
| ஆண்டின் இறுதியில் எஞ்சிய எண்ணிக்கை | - | 293 |

4. **காணி நிருணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இறுதியான கிராமத் திட்ட வரைபடங்கள் மற்றும் இறுதியான பிரதேசவியல் வரைபடங்களைத் தயாரித்தல்**

| | | |
|---|---|---|
| கடந்த வருடத்தின் இறுதியில் மீதி | - | 07 |
| 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | - | 44 |
| 2019 ஆம் ஆண்டில் தயாரித்து வழங்கப்பட்ட இறுதியான கிராமத் திட்ட வரைபடங்கள் மற்றும் இறுதி புவியியல் பண்பு ரீதியான வரைபடங்களின் எண்ணிக்கை | - | 22 |
| 2019 ஆண்டின் இறுதியில் மீதி | - | 29 |

5. **பழைய ஆவணங்களை புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள நிலப்படங்களுக்கு ஏற்ப புதிதுபடுத்துதல்.**

| | | |
|---|---|---|
| கடந்த வருடத்தின் இறுதியில் இற்றைப்படுத்துவதற்காக எஞ்சிய திட்ட வரைபடங்களின் எண்ணிக்கை | - | 1,110 |
| 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற எண்ணிக்கை | - | 11,412 |
| 2019 ஆம் ஆண்டில் இற்றைப்படுத்தப்பட்ட பழைய கிராமத் திட்ட வரைபடங்களின் எண்ணிக்கை | - | 1,929 |
| இறுதியான கிராமத் திட்ட வரைபடங்கள் மற்றும் இறுதி புவியியல் பண்பு ரீதியான வரைபடங்களின் எண்ணிக்கை | - | 2,911 |
| புவியியல் பண்பு ரீதியான ஆரம்பத் திட்ட வரைபடங்கள் மற்றும் கிராமத் திட்ட வரைபடங்களின் எண்ணிக்கை | - | 345 |
| கடத்திரள் வரைபடங்களின் எண்ணிக்கை | - | 5,967 |
| ஆண்டின் இறுதியில் எஞ்சிய கிடைப்பட வரைபடங்களின் எண்ணிக்கை | - | 1,370 |

6. **பழைய நிலப்படங்களைப் பாதுகாத்தல்.**

ஆவண முகாமைத்துவம் மற்றும் தொழில்முறை தரநிலைகள் பிரிவின் மற்றும் மாவட்ட நில அளவை அலுவலங்களில் ஸ்கேன் செய்யப்பட்ட நில புலப் படங்களின் தரவுகளைச் சேகரித்து, தரவுக் களஞ்சியத்திற்கு உள்ளீடு செய்தல்-. - 207151

7. நில அளவைகளுக்குத் தேவையான விபரங்களை வழங்குதல் ( L 96 ) 2,459 காணித் துண்டுகள்

## 13. காணித் தகவல்கள் கட்டமைப்புப் பிரிவு

### பணிகள்

பொதுமக்களின் தேவைக்கேற்ப காணி தகவல் கட்டமைப்பு தரவுகளை பதிவேற்றம்செய்வது

## செயலாற்றுகை

| செயலாற்றுகை | எல்லைகளுக்கான நில அளவைகள் | | கதிரியக்க ஒளிப்பட நில அளவைகள் | | காணித் துண்டுகளின் வலையமைப்பு | | தோட்டங்கள் மற்றும் காடுகளின் நில அளவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | காணித் துண்டுகள் | தாள்கள் | காணித் துண்டுகள் | தாள்கள் | காணித் துண்டுகள் | தாள்கள் | காணித் துண்டுகள் | தாள்கள் |
| 2019ஆம் ஆண்டு வரை | 1,268,611 | 10,264 | 183,449 | 9,390 | 75,183 | 24,393 | 16,046 | 7,064 |
| 2019ஆம் ஆண்டினுள் | 204,305 | 6,826 | 23,284 | 1,758 | 26,266 | 2,693 | - | - |
| 2019ஆம் ஆண்டு இறுதியில் | 1,470,688 | 17,090 | 206,733 | 11,148 | 101,449 | 26,811 | 16,046 | 7,064 |

- காணிகள் தொடர்பிலான தரவு முறைமைக்காக எண்ணியல் தரவு முகாமைத்துவம் மற்றும் தரவுகளை சரிசெய்தல் தொடர்பில் தொழில்நுட்ப அதிகாரிகளுக்காக மற்றும் அரச நில அளவையாளர்கள் மற்றும் நில அளவையாளர்கள், அளவையியல் அதிகாரிகளுக்காக பட்டறைகளை நடாத்துதல்.
- நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் வழங்கப்படுகின்ற உரிமை (உரித்து) ச் சான்றிதழ்களை அச்சிடுவதற்குத் தேவையான கடத்திரள் படத்தை, கடத்திரள் வரைபடத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்காக இணையவழி மின்னியல் செயற்பாட்டினூடாக மென்மேலும் முன்னேற்ற ஆவன செய்தல்.
- பொதுமக்களின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் கோரப்படுகின்ற கடத்திரள் படத்தை தரவு முறைமையினூடாக பெற்று, மின்னஞ்சல் மூலம் காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல்.
- குறுக்குவெட்டும்ம்முக, அளத்தல் நடவடிக்கைக்காக நவீனமயப்படுத்தப்பட்ட மென்பொருளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதன் மூலம் அதுவரை மாதாந்தம் நிறைவு செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கையின் அளவை அதிகரித்தல்.

## 14. ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திகள் பிரிவு

### பணிகள்

திணைக்களத்தின் செயலாற்றுகையின் மீது பாதிப்புச் செலுத்தும் பலவீனமான துறைகளை அடையாளம் கண்டு அவற்றை முறைமைப்படுத்துவதற்காக உரிய முன்மொழிவுகளை முன்வைத்தல், திணைக்களத்தின் நில அளவை மற்றும் வரைபடங்களுக்குத் தேவைப்படும் புதிய வழிமுறைகளைக் கண்டறிதல் மற்றும் அவை திணைக்களத்தின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் என்பவற்றை அதிகரிப்பதற்காக அறிமுகம் செய்தல் புதிய தொழிநுட்ப வழிமுறைகளை ஆராய்ச்சிகளின் ஊடாக அறிமுகம் செய்தல், புதிய தொழிநுட்பத்தினைக் கையாளுவதற்காக அலுவலர்களைப் பயிற்றுவித்தல், திணைக்கள வரைபடங்கள், திட்ட வரைபடங்கள் ஆகியவற்றின் நிலைமைகள் தொடர்பான விவரக் குறிப்புக்களை பாதுகாத்தல், திணைக்கள அளவையியல் ஒழுங்குமுறைகள் மற்றும் மேலாண்மைக் கட்டளைகள் என்பவற்றை நவீன தொழில்நுட்ப முறைக்க ஏற்புடையதான முறையில் மாற்றியமைத்தல்.

### செயலாற்றுகை

1. SDCAD மென்பொருளை அரச நில அளவையாளர்களுக்கும் அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களுக்கும் வழங்குதல்.

2. திணைக்களத்தின் அளவையியல் ஒழுங்குமுறைகளில் 6 ஆவது மறுசீரமைப்பினை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நிறைவுசெய்து ,சிங்களப் புத்தகத்தை அச்சிட ஆவன செய்தல் .
3. துறைகளிலுள்ள தகவல்களை ஒன்றுதிரட்டி முழுமையான உபகரணங்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு , அவதானிப்புகளின் அடிப்படையில் அறிக்கையை ஒன்றைத் தயாரித்து சமர்ப்பித்தல்.
4. பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களின் நிருவாக செயற்பாடுகள் தொடர்பில் கேள்வித்தாள் ஒன்றின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ,அனைத்துப் பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களுக்காகவும் ஒற்றை அலுவலக முறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான அவதானிப்புகள் மற்றும் முடிவுகள் உள்ளிட்ட அறிக்கையொன்றை சமர்ப்பித்தல்.
5. 2019ஆம் ஆண்டிற்காக 85 ஆவது அளவையியல் சஞ்சிகையை 2019.09.12 ஆம் திகதி அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தில் வெளியிடுதல்.
6. கொள்முதல் நடவடிக்கைகளுக்காக கையேடுகளைத் தயாரித்தல்.
7. தினமின பத்திரிகையில் ஒவ்வொரு மூன்றாவது வெள்ளிக்கிழமை யும் காணி அமைச்சு தொடர்பாக வெளியிடப்படுகின்ற‘ காணி ’இணைப்பிதழுக்காக நில அளவைத் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாதாந்தம் ஆக்கங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் .
8. இலங்கையின் பரப்பளவை மீண்டும் கணிப்பிடுவதற்கான செயற்பாடுகளுக்குத் தேவையான அடிப்படைத் தகவல்களை ஒன்றுதிரட்டி ,பகுப்பாய்வு செய்தல்.
9. அழைப்பு விடுக்கப்படுகின்ற கண்காட்சிகளுக்காக இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கண்காட்சிக் கூடத்தை அமைப்பதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

## 15. காணி உரித்துப்பதிவு அளவைப் பிரிவு

**பணிகள்**

1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துகள் பதிவுசெய்யும் சட்டத்திற்கேற்ப, உரித்துகள் நிருணயிக்கும் ஆணையாளர் நாயக அலுவலகம், உரித்துகள் பதிவாளர் நாயக அலுவலகம் என்பவற்றுடன் ஒன்றிணைந்து ‘பிம்சவிய’ திட்டத்தின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்துக் குடிகளதும் காணிகளுக்காக காணியின் அமைந்துள்ள இடம், அளவு, இடத்தின் நிலையான எண், உரித்து தொடர்பில் அரசாங்கத்தின் பொறுப்புடனான உரித்துப் பத்திரத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான வெட்டுமுக வரைபடத்தை தயார் செய்வதற்காக அளவை தொடர்பிலான ஒழுங்கமைப்பு.

அதன் கீழ் வருடாந்த வேலைத்திட்டத்தை ஒழுங்கு செய்தல், ஒதுக்கீடுகளைத் தயாரித்தல், அமைச்சுக்களிலிருந்து பெற்றுக்கொள்கின்ற நிதி ஒதுக்கீடுகளை மாகாண நில அளவையாளர் அலுவலகங்கள் 9 இன் மூலம் ‘பிம்சவிய’ அளத்தல் செயற்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் உள்ளடக்கும் வகையில் நிருவகித்தல், போதியளவு அரச நில அளவையாளர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் பதிவுசெய்யப்பட்ட அதிகாரம் பெறற் நில அளவையாளர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக ஏலத்தின் மூலம் தெரிவுசெய்தல்.

உரித்துச் சான்றிதழ்) உரித்துப் பத்திரம் (வழங்கப்பட்ட காணிகளில் நடைபெறுகின்ற பின்னரான அளத்தலின்போது வெட்டுமுக வரைபடத்தைப் பரிசோதித்து ,உறுதிப்படுத்தல் மற்றும் தரவு முறைமையை மேம்படுத்துதல் .

பொதுமக்கள் மற்றும் பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களின் முறைப்பாடுகள் தொடர்பில் செயற்படுதல் மற்றும் முகங்கொடுக்கின்ற அனுபவங்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு ஏற்ப ஏனைய நிறவனங்களுடன் ஒன்றிணைந்து குறித்த சட்டத்தை மறுசீரமைப்பதற்கும் நடவடிக்கைகளுக்காக பங்களிப்புச் செய்தல் ,காணி அமைச்சு தொடர்பிலான முன்னேற்ற மறு ஆய்வு நடவடிக்கைகள் ,காணி உரித்து நிர்ணயிக்கும் ,உரித்துப் பதிவாளர் ,கணக்காய்வுத் திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் விசாரணைகள் குறித்தும் செயற்படுதல் .

உரித்து பதிவு செய்வதற்கான அளத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட அதிகாரமுடைய நில அளவையாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை வழங்குதல்.

2019 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டு இலக்குகள்

| மனித வள விபரம் | இணைக்கப்பட்டோர் | இலக்கு - காணித் துண்டுகள் | நிதி |
|---|---|---|---|
| அரச நில அளவையாளர்கள் | 100 | 36,000 | ரூபா - 232 மில்லியன் |
| கொள்வனவு மூலம் தெரிவு செய்யப்பட்டு ,பதிவு செய்யப்பட்டுள்ள அதிகாரம்பெற்ற நில அளவையாளர்கள் | 120* | 28,800 | |
| மொத்தம் | 220 | 64,800 | ரூபா - 232 மில்லியன் |

(*கொள்வனவு தாமதமானதால் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2019)

## செயலாற்றுகை

| மனித வளங்கள் பற்றிய விபரம் | உரித்துகள் நிர்ணயிக்கும் ஆணையாளர் நாயகம் முன்வைத்த பிரதேசத்தினுள் முடிக்கப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கை | உரித்துச் சான்றிதழ் வழங்கப்பட்ட பிரதேசத்தினுள் உரித்துகள் நிர்ணயிக்கும் ஆணையாளரின் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதன் பின் தற்போதுள்ள அளந்த துண்டுகளின் எண்ணிக்கை | உப மொத்தம் | அந்தப் பிரதேசங்களுக்கு வெளியாலுள்ள பிரதேச செயலாளர்களின் அளத்தல் வேண்டுகோளின்படி , வெட்டுமுகப்படம் வரைபடமாக வடிவமைக்கப்பட்டுள்ளதுண்டுகளின் எண்ணிக்கை | மொத்தம் காணித் துண்டுகள் | நிதி மில்லியன் ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| அரச நில அளவையாளர்கள் | 32,395 | 1,918 | 34,313 | 32,865 | 67,178 | 138.03 |
| பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் | 25,736 | 21 | 25,757 | 373 | 26,130 | |
| மொத்தம் | 58,131 | 1,939 | 60,070 | 32,238 | 93,308 | 138.03 |

முன்னேற்றம் சத வீதத்தில்

| | மதிப்பீடு | முன்னேற்றம் | சதவீதம் |
|---|---|---|---|
| பௌதீக - காணித்துண்டுகள் | 64,800 | 93,308 | 144% |
| நிதி - மில்லியன் ரூபா | 232 | 138.03 | 59.45% |

உரித்துப் பதிவுசெய்யப்பட்ட அளவை தொடர்பில் ஏற்பட்ட பிணக்குகள் தொடர்பில் பொதுமக்கள் முன்வைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் செயற்படுதல்
(திணைக்களம், மாவட்டம் மற்றும் மாகாண ஆலுவலகம் காணி உரித்துகள் நிர்ணய ஆணையாளர்கள் மற்றும் உரித்துகள் பதிவு செய்யும் அலுவலக ஒருங்கிணைப்புடன் சம்பந்தமண பிணக்குகள்)

| 2018 ஆம் ஆண்டின் மீதி | 2019 ஆண்டுக்குள் பெற்ற | 2019 ஆண்டுக்குள் நிறைவு செய்த | மீதி |
|---|---|---|---|
| 103 | 38 | 74 | 67 |

## பிம்சவிய திட்டம் 2019
## பிரதேச செயலாளர் வாரியக தகுதநிலை வாய்ந்த நிலஅளவை சார்ந்த அளவை




1. நல்லூர்
2. யாழ்ப்பாணம்
3. கண்டாவளை
4. கரச்சி
5. மாதம்பத்து
6. துணுக்காய்
7. முசலி
8. வவுனியா வடக்கு
9. வவுனியா தெற்கு
10. நுவர
11. ராஜாங்கனய
12. தலாவ
13. தம்புத்தேகம
14. நுவரகம்பலாத கிழக்கு
15. மெதிரிகிரிய
16. கிங்குறாகொட
17. வலிகந்த
18. திருகோணமலை
19. கிண்ணியா
20. கந்தலாய்
21. ஈச்சிலம்பற்று (வெருகல்)
22. ஏகறாவூர்பற்று (செங்கலடி)
23. மண்முனை வடக்கு (மட்டக்களப்பு)
24. கோறளைபற்று தெற்கு
25. சம்மாந்துறை
26. அம்பாறை
27. கலேவெல
28. தம்புள்ளே
29. ஹாறிஸ்பத்துவ
30. கண்டி
31. உடுநுவர
32. யட்டிநுவர
33. உடபலாத
34. தொலுவ
35. கொத்மலை
36. வென்னப்புவ
37. குருநாகல்
38. ரிதிகம
39. பன்னல
40. மல்லவபிற்றிய
41. கந்தனை
42. திவுலப்பிற்றிய
43. மீரிகம
44. அத்தனகலை
45. மினுவாங்கொட
46. வத்தளை
47. ஜாஎல
48. கம்பஹா
49. மகர/கடவத்தை
50. தொம்பே
51. களனி
52. கோமாகம
53. மொரடுவ
54. கஸ்பாவ
55. இரத்மலானை
56. தெகிவளை
57. பாணந்துறை
58. கொறனை
59. களுத்தறை
60. கலிகமுவ
61. குறுவிட்ட
62. இரத்தினபுரி
63. பலான்கொட
64. வலிகபொல
65. மகியங்கனை
66. றிதிமாலியத்த
67. சியம்பலன்துவ
68. கிக்கடுவ
69. காலி
70. வலிகம
71. மாத்தறை
72. அம்பாந்தோட்டை
73. லுணுகம்வெகர
74. திஸ்ஸமகாராமை
75. பலியத்த
76. அட்டாளைச்சேனை
77. அக்கறைப்பற்று
78. தமன
79. லகுகல
80. மகா ஓயா
81. திருக்கோயில்
82. யுகன
83. கோறளைபற்று வடக்கு
84. கோறளைபற்று தெற்கு
85. மண்முனை தெற்குமேற்கு
86. மண்முனை தெற்கு
87. போறதீவு பற்று
88. குச்சவெளி
89. மொறவேவ
90. மூதூர்
91. சேருவில
92. இப்பலோகம
93. பச்சிலைப்பள்ளி
94. நானாட்டான்
95. மாந்தை கிழக்கு
96. புதுக்குடியிருப்பு
97. வவுனியா
98. வெங்கலச்சடிகுளம்
99. அம்பன்பொல
100. கல்கமுவ
101. கணேவத்த
102. கிரிபவ
103. கோபிகனை
104. மஹவ
105. பொல்பித்திகம
106. ரஸ்னாயகபுர
107. வாரியபொல
108. புத்தளம்
109. அயகம
110. நிவித்திகல
111. அகலவத்த
112. புலத்சிங்கல
113. இங்கிரிய
114. பாலிந்த-நுவர
115. பூநகரி
116. மடு
117. மன்னார்
118. மாந்தைதெற்கு

அளவுத்திட்டம் 1:2,000,000

**தேசிய காணி உரிமை பதிவீட்டுத் திட்டம்**
**காணி அபிவிருத்தி அமைச்சு**
**இலங்கை நில அளவை திணைக்களம்.**

**ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களை வழங்குதல்**

| | | |
|---|---|---|
| 2019.12.31 ஆந்திகதியன்று பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் எண்ணிக்கை | - | 2,261 |
| 2018.12.31 ஆந்திகதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களைப் | - | 1,661 |
| 2019 ஆம் ஆண்டில் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை | - | 10 |
| 2019.12.31 ஆந்திகதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களைப் பெற்றுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை | - | 1,671 |

## 16. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

நில அளவையாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ், செயற்படுகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தனித்தன்மையை தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் இல. 40(3) பிரிவின் மற்றும் நிதி ஒழுங்கின் 134(1) மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

### பணிகள்

நிதித் திட்டமிடல், உள் நிருவாகம், புத்தகங்கள் மற்றும் கணக்குகளை முறையாக பராமரித்தல் மற்றும் அவற்றைச் சரியாக செய்யப்படுவதை உறுதி செய்தல், அந்த நடவடிக்கைகளில் பிழைகள் மற்றும் மோசடிகளைக் கண்டறிந்து தடுப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற உள்ளகக் கண்காணிப்பு மற்றும் போதியது என்பது தொடர்பிலான தொடர் ஆய்வு செய்தல் மற்றும் சுய மதிப்பீட்டினை மேற்கொள்ளல், திணைக்களச் செயலாற்றுகை மற்றும் செயற்றிறன் குறித்த விமர்சனங்களை மேற்கொள்ளல்.

### செயலாற்றுகை

நில அளவையாளர் நாயகத்தன் ஒப்புதல் மற்றும் கணக்காய்வாளரின் இணக்கம் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டலின் கீழ், 2019ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தைக் கருத்திற்கொண்டு, அனைத்து கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.
இங்கு நிறுவனங்களின் தொகுதி, நிதி ஒழுங்குமுறைகள், களஞ்சிய சுற்றுநிரூபம், முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றுநிரூபம், அரச நிருவாகச் சுற்றுநிரூபம், திணைக்களத்தின் தொடர் கட்டளைகள் மற்றும் அளவை ஒழுங்குமுறைகள் போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு, அதன் மூலம் நிறுவனத்தின் உற்பத்தித் திறன் மற்றும் செயலாற்றுகை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
அதற்கேற்ப, 2019ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்திற்கு தொடர்பில் 15அறிக்கைகளும், அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் தொடர்பில் 03அறிக்கைகளும், மாகாண நில அளவைத் திணைக்களம் தொடர்பில் 03 அறிக்கைகளும், மாவட்ட நில அளவைத் திணைக்களம் தொடர்பில் 11அறிக்கைகளும் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன.

## 17. பரீட்சைகள் பிரிவு

### பணிகள்

அனைத்துத் திணைக்களங்களினதும் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகள், அரச சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள முறையின் அடிப்படையில் திணைக்கள அதிகாரிகளுக்கு செயற்றிறன் பரீட்சைகளை நடாத்துதல்.

## செயலாற்றுகை

| தொடரிலக்கம் | பரீட்சை | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தகைமை பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பரீட்சை நடாத்தப்பட்ட /குறிப்பிடப்பட்ட தினங்கள் | சமூகமளித்திருந்தவர்களின் எண்ணிக்கை | பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி | சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை | பலவீனமான சித்திகளைப்பெற்றவர்களின் எண்ணிக்கை | செலவாகிய மொத்த தொகை (ரூபா) | ஒரு பரீட்சார்த்திக்காக செலவழிக்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நில அளவையாளர் திணைக்களத்தின் (நிருவாக சேவை வகை) தொழில்நுட்ப மற்றும் நிருவாக உத்தியோகத்தர் பதவிக்காக நடாத்தப்படுகின்ற முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை. | 19 | 19 | 2019.01.26 | 18 | 2019.03.13 | 16 | 02 | 12023.23 | 633.00 |
| 2 | நில அளவைகள் வெளிக்கள உதவியாளர் சேவையிலுள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படும் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை (மாவட்ட மட்டத்தில்) | 138 | 119 | 2019.05.06-10 | 115 | 2019.06.14 | 113 | - | - | - |
| 3 | நில அளவைகள் வெளிக்கள உதவியாளர் சேவையிலுள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | 46 | 33 | 2019.05.11 | 22 | 2019.05.21 | 20 | - | 5140.00 | 156.00 |
| 4 | நில அளவைகள் வெளிக்கள உதவியாளர் சேவையிலுள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படும் மூன்றாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை (மாவட்ட மட்டத்தில்) | 25 | 08 | 2019.05.13-17 | 06 | 2019.06.14 | 06 | - | - | - |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | அதிகாரம் அளிக்கப்பட்ட திட்ட வபைடக் கலைஞர்களாக நில அளவையாளர் நாயகம் அவர்களின் சான்றிதழ் வழங்கும் பரீட்சை பகுதி 1 (2019 மார்ச் வர்த்தமானிப் பத்திரிகை) | 341 | 121 | 2019.07.27 | 72 | 2019.09.20 | 31 | - | 41,537.44 | 343.00 |
| 6 | இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்பு II தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை. | 162 | 152 | 2019.09.21 | | | | | செலவு விபரங்கள் பரீட்சைத் திணைக்க ளத்தினா ல் வழங்கப்ப டவில் லை. | |
| 7 | இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்பு II தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை. | 165 | 103 | பரீட்சைத் திணைக்க ளத்தினால் நடாத்தப்ப டவுள்ளது. | - | - | - | - | -. | - |
| 8 | முதலாவது தொழிற்றுறை சாராத சேவைப் பிரிவல்லாத தொழிலுக்காக நடாத்தப்படுகின்ற முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை (திணைக்கள உதவியாளர்) | 17 | 17 | 2019.09.16-20 | 17 | 2019.09.30 | 17 | - | - | - |
| 9 | அதிகாரம் அளிக்கப்பட்ட திட்ட வபைடக் கலைஞர்களாக நில அளவையாளர் நாயகம் அவர்களின் சான்றிதழ் வழங்கும் பரீட்சை பகுதி - II (2019 மார்ச் வர்த்தமானிப் பத்திரிகை) | 31 | 31 | 2019.10.19-20 | 29 | 2019.12.23 | 03 | - | 25068.42 | 809.00 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | நில அளவைகள் வெளிக்கள உதவியாளர் சேவையிலுள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படும் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை (மாவட்ட மட்டத்தில்) | 114 | 114 | 2019.11.04-08 | 111 | 2019.12.12 | 109 | - | - | - |
| 11 | நில அளவைகள் வெளிக்கள உதவியாளர் சேவையிலுள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | 59 | 57 | 2019.11.09 | 43 | 2019.11.29 | 33 | - | 6285.00 | 110.00 |
| 12 | நில அளவைகள் வெளிக்கள உதவியாளர் சேவையிலுள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படும் மூன்றாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை (மாவட்ட மட்டத்தில்) | 31 | 31 | 2019.11.11-18 | 28 | 2020.01.03 | 27 | - | - | - |
| 13 | இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் லித்தோ தொழில்நுட்ப அதிகாரிப் பதவிக்கான (பயிற்சி பெறும் தரத்திற்கு) சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான போட்டிப் பரீட்சை - 2019 | 367 | 147 | 2019.06.01 | 107 | 2019.07.09 | 39 | - | 31372.80 | 163.00 |
| 14 | நில அளவையாளர் திணைக்களத்தின் அளத்தல் உபகரண தொழில்நுட்பவியலாளர் பதவியில் சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சை - 2018 (2019) | 334 | 46 | 2019.06.01 | 22 | 2019.06.19 | 10 | - | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | நில அளவையாளர் திணைக்களத்திற்கு நில அளவைத்துறை உதவியாளர்களை சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சை - 2019 ஜூன் | 1879 | 367 | 2019.06.29 | 357 | 2019.07.09 | 265 | - | 58518.94 | 159.00 |
| 16 | நில அளவையாளர் திணைக்களத்திற்கு நில அளவைத்துறை உதவியாளர்களை சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சை - 2019 நவம்பர் | 893 | 99 | நிதியமைச்சின் எழுத்துமூல அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. | - | - | - | - | - | - |
| 17 | நில அளவையாளர் திணைக்களத்தின் (நிருவாக சேவை வகை) தொழில்நுட்ப மற்றும் நிருவாக உத்தியோகத்தர் பதவிக்காக நடாத்தப்படுகின்ற முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை.-2019 | 07 | 07 | 2019.12.09 | 07 | வழங்குவதற்கு தயாராகவுள்ளது. | - | - | - | - |

## 18. முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு

### பணிகள்

அதிகாரிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்குத் தேவையான கருத்தரங்குகள் ,பயிற்சி முகாம்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல்.

உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்காக குறித்த தகைமை உள்ள அதிகாரிகளை கலந்துகொள்ளச் செய்தல்.

### செயலாற்றுகை

தயவுசெய்து முதன்மை அறிக்கையின் பக்க இலக்கங்கள் 20-22 ( மனித வள அபிவிருத்தி) பார்க்கவும்.

## 19. முன்னேற்றப் பிரிவு

### பணிகள்

- நில அளவையாளர் திணைக்களக் கிளைகளினால் அனுப்பப்படுகின்ற கடிதங்களை தபால் திணைக்களத்திற்கு வழங்குதல்
- நில அலவையாளர் நாயகத்தின் அலுவலகக் கிளைகளுக்குக், கிடைக்கப்பெறுகின்ற கடிதங்கள் தொடர்பில் பின்னூட்டல் செய்வதற்கான தரவு முறைமைக்கு (Mail Tracking System) உள்ளீடு செய்யப்பட்டு திணைக்களத்தின் அனைத்து, குறித்த கிளைகளுக்கு பகிர்ந்தளித்தல்,
- சுற்றுநிரூபங்களையும் திணைக்கள வலைத்தலத்தின் உள்ளீடு செய்தல்,
- கடிதங்களை மொழிபெயர்ப்புச் செய்தல்
- கூடுதல் நேரம் மற்றும் விடுமுறைத்தின் சம்பளம், வழங்கும் அமைப்பின் கீழ் பணிகளில் அமர்த்துவதற்குத் தேவையான அனுமதியை வழங்குதல்.
- திணைக்களத்தின் பணிகள், மற்றும் பல்வேறு பிரிவுகளையும் அறிந்துகொள்வதற்காக வருகை தருகின்ற பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாதுகாப்பு படை அதிகாரிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்
- செயற்குழுவின் செலவு - வரவு, சென்ற வருடத்திற்கான நில அளவையாளர் நாயகத்தின், தேவைப்பாடுகளுக்காக வழங்கப்படுகின்ற முன்னேற்ற அறிக்கை நில அளவையாளர் நாயகத்தின் அலுவலக் கிளைகளின் தேவைப்பாடான, செயலாற்றுகை ஒழுங்கமைத்தல்
- ரோணியோ அச்சியந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆவன செய்தல் .

### செயலாற்றுகை

தபால் திணைக்களத்திற்கு 33,821 கடிதம் ஒப்படைக்கப்பட்டுள்ளது .

திணைக்களத்திற்குக் கிடைத்த 45,193 கடிதங்கள் பற்றிய பின்னூட்டலிடும் தரவு முறைமை உள்ளீடு செய்யப்பட்டுள்ளது .

சுற்றுநிரூபம் 102 வலைத்தளத்தில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது .

சிங்கள - தமிழ் மொழிபெயர்ப்பின் கீழ் 76 கடிதங்கள் (232 பக்கங்கள்) மொழிபெயர்ப்புச் செய்யபட்டுள்ளதுடன், தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஓருவர் திணைக்களத்தில் இல்லாமயினால் ஆந்த விடயங்களுக்காக 86 கடிதங்கள் (272 பக்கங்கள்) வெளியக மொழிபெயர்ப்பாளர் ஓருவரின் மூலம் செய்து கோள்வதற்கு ஓழுங்கு செய்யப்பட்டள்ளது

மேலதிக நேரம் மற்றும் விடுமுறைத் தின சம்பளம் வழங்கும் முறையின் கீழ் கடமையாற்றுவதற்குத் தேவையான 389 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன .

பல்கலைக கழக மாணவர்கள் மற்றும் பாதுகாப்பு படை அதிகாரிகன் 258 பேருக்கு திணைக்களத்தின் பணிகள் மற்றும் ஏனைய பிரிவுகள் பற்றித் தெரிந்துகொள்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன .

2020 வரவு செலவு செயற்குழுவின் தேவைப்பாடுகளுக்காக வழங்கப்படுகின்ற முன்னேற்ற அறிக்கை 2018 , ஆண்டுக்காக நில அளவையாளர் நாயகத்தின் செயலாற்றுகை அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.

கடிதங்கள் மற்றும் மாதிரிப் படிவங்கள் 37 (95,670 பிரதிகள்) ரோணி இயந்திரத்தின் மூலம் அச்சிடப்பட்டுள்ளன.

*இணைப்பு ii*

**கள அலுவலகங்களால் செய்யப்படும் செயல்பாடுகள்**

**1. காணி அளத்தல்**

2019 ஆம் ஆண்டிற்குள் தீர்மானிக்கப்பட்ட இலக்குகளில்122 % வீத முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது .

| நில அளவை வகை | பௌதீக செயலாற்றுகை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருடாந்த இலக்கு | | திரண்ட இலக்கு | | திரண்ட செயலாற்றுகை | | | பெற்றுக் கொள்ளப்பட்ட செயலாற்றுகை (%) | |
| | நில அளவையாளர் மாதங்கள் | காணித் துண்டுகள் | நில அளவையாளர் மாதங்கள் | காணித் துண்டுகள் | நில அளவையாளர் மாதங்கள் | காணித் துண்டுகள் | நில அளவைக் கோரிக்கைகள் | நில அளவையாளர் மாதங்கள் | காணித் துண்டுகள் |
| எல்லைக் கல் இடும் நில அளவைகள் | 3699 | 96,270 | 3810 | 97185 | 4555 | 109036 (69598 Allotment) | 5217 | 120 | 112 |
| நானாவித அளவைகள் | 1123 | 28,740 | 849 | 23376 | 1246 | 33401 | 2618 | 147 | 143 |
| காணி சுவீகரிக்கும் நில அளவைகள் | 731 | 23,093 | 759 | 19484 | 811 | 22171 | 925 | 107 | 114 |
| பொறியியலாளர் களின் நில அளவைகள் | 168 | 3400ha | 82 | 546ha | 354 | 7420ha | 103 | 432 | |
| வரைபடமாக்கலுக்காக கட்டுப்பாட்டுப் புள்ளியினைத் தாபித்தல் | 150 | | 177 | | 217 | | 366 | 123 | |
| நீதிமன்ற ஆணைக்குழுவின் நில அளவைகள் | 513 | 9,480 | 538 | 11167 | 513 | 10140 | 672 | 95 | 91 |
| வரைபட நில அளவைகள் | 1,200 | 36,000 | 1166 | 37580 | 1278 | 35460 | 1024 | 110 | 94 |
| புவியியல் நிலைசார் புள்ளிகளை தாபித்தல் | 384 | 7200 Pt | 238 | 7130 Pt | 302 | 9067 Pt | | 127 | 127 |
| மொத்தம் | | | 7619 | 188792 | 9276 | 210208 | | 122 | 111 |

- **பொதுமக்களுக்கு நன்கொடைப் பத்திரங்களை வழங்குவதற்கான அளத்தல் நடவடிக்கைகள்.**
  - காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 1.1. மில்லியன் காணித் துண்டுகளை அளக்கும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அளத்தல் நடவடிக்கைகள்.
  - அரசாங்கத்தின் துரித அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நில அளவை.

- **வீதிகள் மற்றும் புகையிரத வீதிகள் என்பவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நில அளவைகள்**
    - குருணாகல - ஹபரண புகையிரதப் பாதை மற்றும் அதற்கான காணிகளை கையகப்பற்றும் நில அளவை.
    - மத்திய அதிவேகப் பாதைத் செயற்றிட்டம்
    - காலி - தெனியாய - மாதம்பை பாதை
    - தெற்கு அதிவேகப் பாதை
    - தெனியாய நகர அபிவிருத்திக்காக தெனியாய பல்லேகம வீதியின் அளத்தல்
    - தெனியாய புதிய மருத்துவமனைக்கான மாற்று வழிகளின் அளத்தல்
    - இலகு புகையித செயற்றிட்டம்
    - இராஜகிரியிலிருந்து அத்துருகிரிய வரையிலான மேம்பாலத்தினூடாகச் செல்கின்ற அதிவேகப் பாதை
    - ருவன்புர அதி வேகப்பாதை
    - புறக்கோட்டை பல்நிலைப் போக்குவரத்து நிலையத் செயற்றிட்டத்திற்கான அளத்தல்
    - கம்பஹா மிரிஸ்வத்த வீதித் திட்டத்திற்காக கையகப்படுத்தலுக்கான அளத்தல்
    - கொழும்பு கண்டி வீதியினூடாக நிட்டம்புவவிலிருந்து பஸ்யாலை வரையுள்ள பகுதியைக் கையகப்படுத்தலுக்கான அளத்தல்
    - பொலன்னறுவ, மைத்திரிபால சிரிசேன மாவத்தையின் சுற்றுப்பகுதி உள்ளிட்ட 4 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக .
    - புதிய களனிப் பாலத்திலிருந்து இராஜகிரி வரையிலான மேம்பாலத்தினூடாக செல்கின்ற அதிவேகப் பாதைச் செயற்றிட்டம்.
    - நகரத்தை அண்மித்த புகயிரதசெயற்றிடம் அளத்தல் நடவடிக்கை
    - வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான வீதியை விசாலமாக்குவதற்காக காணி கையகப்படுத்தலுக்கான அளத்தல்.
    - புதிய தெருச் சந்திகளை அமைப்பதற்குத் தேவையான சித்ராகல தெருச் சந்தியை அமைப்பதற்கான திட்டத்தின் நில அளவை.
    - மொரகஹகந்த - களுகங்கை வீதி அபிவிருத்தித் வேலைத்திட்டத்திற்காக கையகப்படுத்தலுக்கான அளத்தல்.

- **கைத்தொழில் பேட்டைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நில அளவைகள்**
    - இலங்கை முதலீட்டுச் சபைக்குக்குரிய பிங்கிரிய முதலீட்டு வலயத்தின் வீதிக்காக கையகப்படுத்த வேண்டிய காணிகளை இனங்காண்பதற்கான அளத்தல்
    - மில்லனிய தொழிற்பேட்டையை அமைப்பதற்கு ஏதுவான அளத்தல்
    - இலங்கை முதலீட்டுச் சபைக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக மகாவலி அதிகார சபைக்குரிய 2075 ஏக்கர் நிலத்தை அளத்தல் .

- **அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பொறியியல் நில அளவைகள்**
    - கண்டி நகர அபிவிருத்திச் திட்டம்
    - மாற்றுவழி நகர அபிவிருத்திச் திட்டம்
    - வீதி வலையமைப்புத் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவச் திட்டம்
    - பஸ்னாகொட நீர்த்தேக்கச் திட்டம்
    - லோலுகஸ்வெவ திட்டம்
    - மேல் எலெஹர திட்டம்
    - அநுராதபுர நகர அபிவிருத்திச் திட்டம்
    - அம்பானகல நீர்த்தேக்கத்தின் அளத்தல் நடவடிக்கை

- மொரகஹகந்த மற்றும் களுகங்க இரண்டையும் இணைக்கின்ற கால்வாய் வழி
- தல்பிடகல நீர்த்தேக்க திட்டம் அளத்தல்
- நாச்சதூவ நீர்ப்பாசனத் திட்டம்
- ரூகம் - கித்துல் நீர்த்தேக்க ஒன்றிணைந்த திட்டம்
- விசேட நீர்ப்பாசனத் திட்டம்
- வரலாற்றுச் சிறப்புமிக்க ரன்கொத்மலு விகாரை நிலத்தின் சமவுயரக் கோட்டு வரைபடத்தைத் தயார் செய்தல்.
